# மாதநிலா

உங்கள் குடும்ப நிலா

MATHANILA මාතනිලා

நிலா - 22 Regd No: 1419 01 ஆகஸ்ட் 2014


சமூக ஒற்றுமை
மௌலவி: மன்சூர் நௌசாத்

வவுனியா மாணவன்
ஜப்பான் பயணம்!

மாதநிலாவில்
மாதம் ஒரு புத்தகம்

இந்திய பிரதமர்
நரேந்திரமோடி
மயிரிலையில் தப்பினார்

விஜயுடன் நடிப்பதை
உறுதி செய்துள்ளார் சுருதி



யார்
இவர்?
கண்டுபிடித்து
வெல்லுங்கள்
500 ரூபாய்
ரீலோட்
(மேலதிக விபரம் உள்ளே...)

இம்மாத குட்டீஸ்

அறிவு! ஆனந்தம்!! ஆச்சரியம்!!!

# New Five Star

## Beauty Care



- Skin Care Service (All Facial and Act)
- Hair Care Service (Hair Style and Treatment)
- Bridal Dressing (Hindu, Christian, Reception Party)
- All Kind of Tailoring Service
- Diploma in Beauty culture - 3 month
- Diploma in tailoring

Facial 800/- - 6000/-
Icing Cake upto 1500/-
All Kind of classess

No:11, Mill Road, Vavuniya.
T.P: 077 9049492

# Uma Travels &
## SRV Transport

Wedding Car,
Van & Bus for Hair



Uma vasa, Kanthasamy Kovil Road, Vavuniya.
077 7476749 / 077 7564956

விலை: 50/-




# மாதநிலா

உங்கள் குடும்ப நிலா!

MATHANILA මාතනිලා

இதழாசிரியர்
**திருமதி.அனிதா விஜய்**

நிர்வாக இயக்குனர்
**திரு.எஸ்.விஜய்**

கணினி வடிவமைப்பு,
அச்சுப் பதிப்பு
**விஜய் அச்சுப் பதிப்பகம்**
172, மில் வீதி, வவுனியா.
024 222 5799 / 077 900 9491

வெளியீடு
**பதிப்புநிலம் வெளியீட்டகம்**
172, மில் வீதி, வவுனியா.
024 222 5799 / 077 900 9491

**அனைத்து ஆக்கங்களையும் கருத்துக்களையும் அனுப்ப வேண்டிய முகவரி**

ஆசிரியர்,
**"மாதநிலா"**
172B, மில் வீதி, வவுனியா.



எமது சஞ்சிகையில் வெளிவந்திருக்கும் ஆக்கங்களுக்கு அவரவரே பொறுப்பாளிகளாவர்

விளம்பரங்களில் உள்ள விடயங்களுக்கு விளம்பரதாரர்களே உரித்தாவார்கள்


## இம்மாத வேண்டுகோள்!



**அன்பின் சகோதரிகளே...**

ஆள் பாதி ஆடை பாதி என்று சொல்லுவோம். பாதி என்று சொன்னத தப்பா விளங்கிக்கொண்டீர்களோ அல்லது உங்களுக்கு சாதகமா எடுத்துக்கொண்டீர்களோ ஆடையை பாதியாக்கிட்டீங்க... எங்களிடம் இருக்குற அழகை காட்டனும் என்ற ஆசையால நாங்கள் சில கலாச்சார பண்பாடுகளை மீறி நடக்கின்றோம். அழகை காட்டுவதற்கு ஆடை குறைப்பது ஏன் ? எந்த ஆடையையும் அழகாக உடுத்தி கொள்வதில் அழகு தானாக தெரிந்துவிடும். அதை விடுத்து ஆடை குறைப்பது என்பது தப்புதான். நாகரிகமாக நாம் உடுத்திக்கொள்ள நம் பண்பாட்டுக்கு ஏற்ப நல்ல ஆடைகளும் இருகின்றதே. அதை தெரிவு செய்யலாம். அந்தரங்கம் வெளிப்பட ஆடை உடுத்துவது அநாகரீகம். அதை தவிர்த்து கொள்ள வேண்டும். பழையன கழிதலும் புதியன புகுதலும் மரபு. புதியவற்றில் நமக்கு தேவையானது பாதுகாப்பானதை மட்டுமே எடுத்துக்கொண்டு அன்னப்பறவை போல இருக்க தெரிஞ்சுக்கனும். எங்கள் நடத்தை தான் எதிரே வருபவர்களின் எண்ணங்கள் எம் மேல் மரியாதையை தர இட்டுச் செல்லும். அதிலே ஆடைக்கு நிறையவே பங்கு உண்டு. எனவே நாம் அணியும் ஆடைகள் அடுத்தவர்களை துன்புறுத்தாவண்ணம் அணிந்து கொள்வது நல்லது என்பது எம் கருத்து.

# ஆன்மீகத் துறவி விவேகானந்தர்

சென்றமாத தொடர்...



பலர் முகம் சுளித்தனர். இதுபற்றி அவர் கவலை கொள்ளவில்லை கண்டு கொள்ளவும் இல்லை.

எடுத்த எடுப்பிலேயே 'சகோதர சகோதரிகளே!' என்று தமது சொற்பொழிவைக் கம்பீரமாக விவேகானந்தர் தொடங்கினார். ஏளனம் செய்தவர்கள் வாய் மூடினர். ஆடையைக் கண்டு அறுவறுப்டைந்தவர்கள் ஆச்சரியப்பட்டனர்.

சிறிது இடைவெளிவிட்டு மீண்டும் விவேகானந்தர் தமது பேச்சைத் தொடங்கினார். அரங்கம் முழுவதும் அவரையே பார்த்தது அவர் பேச்சை மட்டுமே கேட்டது அவர் சொல்வதைத் தங்கள் மனதில் பதிந்து கொண்டது. இந்தக் கூட்டத்தில ஆடையிலும், தோற்றத்திலும் அவர் தனித்து நின்றார் மேடை முழக்கத்திலும் அவரே தனித்து வென்றார். பேசி முடித்த பின் அவரைத் தொடர்ந்து ஒரு கூட்டமே வந்தது.

அந்தக் கூட்டத்தில் 'மெட்காப்' நகர் மகளிர் மன்றத்தில் விவேகானந்தர் பேசிய போது மனதைப் பறிகொடுத்த அந்த இளம் பெண்ணும் இருந்தாள்.

இந்த மாநாட்டில் மீண்டும் செப்டம்பர் 15, 19, 20 ஆகிய மூன்று நாட்கள் விவேகானந்தர் முழங்கினார். அப்போது,

"அளவுக்கு மீறிய மதப்பற்று, மூடபக்தி இவற்றிலிருந்து தோன்றிய மதவெறி, இவை இந்த அழகிய உலகை நெடுநாளாகப் இறுகப் பற்றியுள்ளன வன்முறையை நிரப்பியுள்ளன அடுத்தடுத்து உலகை உதிரப் பெருக்கில் மூழ்கடித்து, நாகரீகத்தை அழித்து, எத்தனையோ சமுதாயங்களை நம்பிக்கை இழக்கச் செய்து விட்டன. அந்தப் பயங்கரப் பைசாக் கொடூரச் செயல்கள் தோன்றாதிருப்பின், மனித சமுதாயம் இன்றிருப்பதை விடப் பன்மடங்கு உயர் நிலை எய்திருக்கும்" என்று விவேகானந்தர் முழங்கினார்.

விவேகானந்தர் பேசிவிட்டு வெளியில் வந்ததும் ஒரு பெரும் கூட்டம், அவரிடம் கையெழுத்துப் பெறுவதற்காகக் காத்திருந்தது. அவற்றில் அந்தப் பெண்ணும் இருந்தாள்.. அந்தப் பெண் யார்?

மெட்காப் மகளிர் மன்றத்தில் விவேகானந்தர் பேசியதைக் கேட்டு, அவரைத் தனிமையில் சந்திக்க முயன்றாள். அது முடியாமல் போயிற்று!

சிகாகோவில் விவேகானந்தர் நான்கு நாட்கள் முழங்கிய போதும், வாய்ப்பை உருவாக்கிக் கொண்டு விவேகானந்தரைத் தனிமையில் சந்தித்து விட வேண்டும் என்று விரும்பினாள் அப்போதும் அதற்கு வாய்ப்புக் கிட்டவில்லை!

அதன்பின் விவேகானந்தரின் மந்திரச் சொற்பொழிவைக் கேட்டு மயங்கிய அமெரிக்கர்கள், அயோவா, செயிண்ட் லூயிஸ், கேம்பிரிட்ஜ், வாஷிங்டன், நியூயார்க் ஆகிய இடங்களில் எல்லாம் விவேகானந்தரைப் பேச வைத்து மகிழ்ந்தனர்.

அத்தனை இடங்களுக்கும் அந்தப் பெண் வந்தாள் விவேகானந்த

(தொடரும்...)

## ஐந்து லட்சம் மாணவர்கள் மத்தியில் முதலிடம் பெற்ற தமிழ்மாணவன்



இங்கிலாந்தில் ஐந்து லட்சம் மாணவர்கள் பங்குபற்றிய போட்டியில் முதலிடம் பெற்று 150,000 பவுண்ட்ஸ் பரிசுத்தொகை பெற்று

ஈழத்தாய்திருநாட்டுக்கு பெருமை சேர்த்த இளவல் குறிஞ்சிகன்! வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ரமேக்ஷ் தனலக்ஷமி தம்பதிகளின்புதல்வன் செல்வன் குறிஞ்சிகன் ஒன்பது வயதுடையவர். இவர் பிரித்தானியாவில் பீச்சோம் ஆரம்பப் பாடசாலையில் (Beecholme Primary School) நான்காம் ஆண்டில் கல்வி கற்று வருகின்றார்.

அங்கு பிரித்தானியா எரிவாயு (British Gas) நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்டு, பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற பசுமை பேணல் சம்பந்தமான பசுமை வீடு கட்டுதல் , வீடு வடிவமைத்தல் போட்டியில் தனது மிகவும் சிறந்த சிந்தனையால் வீட்டின் உள்ளக, வெளிப்புற அமைப்பை வடிவமைத்திருந்தார். அதனால் இவரது பாடசாலை முதலாவது இடத்தைப் பெற்று 150,000 பெறுமதியான பரிசினைத் தட்டிக்கொண்டது. இளைய தலைமுறையினரிடையே எரிவாயு சேமிப்பு, பசுமை பேணல் என்பன சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இப்போட்டி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இங்கு ஐந்நூறுக்கு மேற்பட்ட பாடசாலைகள் பங்கு பங்குபற்றியிருந்தன . ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் கலந்து கொண்டனர் . முழுமையாக ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர். அவர்களில் ஆறு பேர் முதற்சுற்றில் தெரிவு செய்யப்பட்டு இறுதிச் சுற்றில் இவர் வெற்றியாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார் . இவரது இச்சாதனையால் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மட்டற்ற மகிழ்ச்சியடைந்துள்ளனர். இதன் காரணமாக எம்தமிழ் சமூகம் சார்பாக "மாதநிலா" நிர்வாகமும் பெருமைகொண்டு குறிஞ்சிகனை வாழ்த்துகின்றது.

## வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய சாரணமாணவன் ஜப்பான் பயணம்!



வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய சாரண துருப்பைச் சேர்ந்த சாரணன் செல்வன் கணேசலிங்கம் யதுகனேஷ் இலங்கை சாரண சங்கத்தினால் வழங்கப்படும் புலமைப்பரிசில் பெற்று " Inspire japan — 2014 " எனும் நிகழ்வில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் மூவர் கொண்ட குழாமில் இவ் மாணவனும் பயணமாகவுள்ளார்.

இவ் நிகழ்வு ஜூலை 29 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 10 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ் இலங்கை குழாமில் குருநாகல் சென். அனீஸ் கல்லூரியைச் சேர்ந்த ஆர்.கே.வி. ரொசான் விசமித் அவர்களும் இவர்களுக்கு பொறுப்பான சாரண தலைவராக கோமாகம சாரண மாவட்டத்தைச் சேர்ந்த உதவி மாவட்ட ஆணையாளர் திரு லசந்த சஞ்சீவ விமலசிறி அவர்களும் பயணமாகவுள்ளனர்.



**சென்ற மாத தொடர்....**

விமானம் தாய்லாந்து முதல் கஜகஸ்தான் எல்லை வரையோ அல்லது இந்தோனேஷியா முதல் தென் இந்தியப் பெருங்கடல் வரையோ பறந்திருக்கலாம் என்று கணிக்கப்பட்டு இந்த இரு வழிகளிலும் விமானத்தைத் தேடும் பணி முடுக்கிவிடப்பட்டதே இந்த ஊகங்களுக்குக் காரணமாக இருக்கலாம்.

# மாயமாய் மறைந்த மலேசிய விமானம்: மந்திரவாதியும், பேர்முடா முக்கோணப்புதிரும்

அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதல் போல, கடத்தப்பட்ட விமானத்தைப் பயன்படுத்தி இந்தியாவில் தாக்குதல் நடத்தப்படலாம் என்றும், இன்னும் எத்தனை எத்தனை ஊகங்களை ஊடகங்கள் வெளியிட்டாலும், அவை அனைத்தும் சில பொதுவான பண்புகளுக்குள் அடங்கிவிடக்கூடியவைதான். ஒன்று விமானம் தொடங்கி, விமானியே தற்கொலை அல்லது நாசம் ஏற்படுத்தும் எண்ணத்துடன் விமானம் கடலில் விழுந்து மூழ்கும்படிச் செய்திருக்கலாம். விமானிகளின் அறையில் ஆக்சிஜன் விநியோகம் குறைந்து அதை உணர்வதற்குள் அவர்கள் மயக்கநிலைக்குச் சென்றிருக்கலாம் எரிபொருள் இருந்தவரை விமானம் பறந்து கடலில் விழுந்திருக்கலாம் என்பது வரை இந்த ஊகங்கள் செய்யப்பட்டுள்ளன. ஐ.நா. வின் கீழ் செயல்படும் அனுவெடிச் சோதனைத் தடை அமைப்பு தரைக்கடியிலோ தரைக்கு மேலோ அனுவெடிச் சோதனை நடைபெற்றால் அதைக் கண்டுபிடிப்பதற்கான கருவிகளை நிறுவியுள்ளது.




அனுவெடிச் சோதனைதான் என்றில்லை, நிலநடுக்கம், பெரும் வெடிவிபத்து அல்லது விமானம் நடுவானில் வெடித்துச் சிதறுவது, கடலில் விழுவது போன்ற நிகழ்வுகளும், இன்ஃப்ராசோனிக் வேவ்ஸ் என்றழைக்கப்படும் கேளா ஒலி அலைகள் மூலம் இந்தக் கருவிகளால் உணரப்பட்டுவிடும். அப்படிப் பார்த்தால், மலேசிய விமானம் நடுவானில் வெடித்துச் சிதறியிருந்தாலோ கடலில் விழுந்திருந்தாலோ அதுவும் கேளா ஒலி அலைகளின் அதிர்வாகப் பதிவாகியிருக்க வேண்டும். அப்படி ஏதும் பதிவாகவில்லை என்கிறது அனுவெடிச் சோதனைத் தடை அமைப்பு. இந்த ஒரு காரணி மட்டுமல்ல, வேறு பல காரணிகளும்கூட விபத்து நடந்திருக்கக்கூடும் என்பதற்கான வாய்ப்பை வெகுவாகக் குறைத்துவிட்டன. விமானம் கடத்தப்பட்டிருக்கக்கூடும் என்ற ஊகத்தைத் தூண்டிய காரணிகளே அவை. சரி,

விபத்துக்குள்ளாகி இருக்க வேண்டும் அல்லது விமானம் கடத்தப்பட்டிருக்க வேண்டும் விமானக் கடத்தல் வல்லரசுகளின் விளையாட்டாகவும் இருக்கக்கூடும்.

விமானம் விபத்துக்குள்ளாகி இருக்கக்கூடுமா? விபத்து எனில் அது நடுவானில் வெடித்துச் சிதறியிருக்க வேண்டும் அல்லது கடலில் விழுந்து மூழ்கியிருக்க வேண்டும். விமானங்களின் கட்டமைப்பில் ஒரு சிறிய குறைபாடு இருந்தாலும், அது நடுவானில் சுக்குநூறாக வெடித்துச் சிதறிவிடுவதற்கு வாய்ப்பாகி விடும் என்பது

விமானம் கடத்தப்பட்டிருக்குமா?

ஈரான் நாட்டைச் சேர்ந்த 2 பயணிகள் போலி பாஸ்போர்ட்டில் பயணித்துள்ளனர்.

அவர்கள் திட்டமிட்டு விமானத்தைக் கடத்தியிருக்கலாம் என்பது முதலில் செய்யப்பட்ட ஊகம். ஆனால், சர்வதேச அளவிலான புலனாய்வு அமைப்புகள் அதற்கு வாய்ப்பில்லை என்று பகிரங்கமாகவே அறிவித்துவிட்டன. எஞ்சியிருக்கும் ஒரே வாய்ப்பு விமானிகளை வட்டம் போட்டுக் காட்டுவதே. அதனால்தான், விமானியின் வீட்டில் சிமுலேட்டர் கைப்பற்றப்பட்டதில் தொடங்கி, அவர் மலேசிய எதிர்க்கட்சித் தலைவர் அன்வரின் உறவினர் என்பது வரை அனைத்தும் சந்தேகக் கண் கொண்டு பார்க்கப்படுகிறது.

விமானம் கடத்தப்பட்டிருக்குமேயானால், அதற்கு ஒரு நோக்கம் இருந்திருக்க வேண்டும். எனவே, கடத்தியவர்களிடமிருந்து உடனடியாக கோரிக்கைகள் வந்திருக்கும். அப்படி ஏதும் இதுவரை காலமும் வரவில்லை. பெரும் சேதத்தை ஏற்படுத்துவதுதான் விமானியின் நோக்கம் என்றால், காணாப் பிணமாக்குவது என்பார்களே, அப்படி சுவடுகூடத் தெரியாமல் 239 உயிர்களுடன் விமானத்தைச் சிதைக்கும் நோக்கத்திற்குக் காரணம் வேண்டும். ஆக எந்தத் தர்க்கத்திற்குள்ளும் பிடிபடவில்லை என்னும்போது மனிதன் பலவீனமாகி விடுகிறான். பலவீனம் எப்போதுமே அதிசயங்களில்தானே அடைக்கலமாகும்? மந்திரவாதிகளின் குறிகளும், பெர்முடா முக்கோணப் புதிர்களும் அந்த இடத்தை நிறைவு செய்கின்றன. மலேசியாவில் பிரபலமான மந்திரவாதி ஒருவர், விமானம் இன்னும் பறந்துகொண்டிருக்க வேண்டும் அல்லது நீரில் மூழ்கியிருக்க வேண்டும் என்று குறிபார்த்துச் சொன்னார். அவருக்குப் போட்டியாக, பெர்முடா கடற்பகுதியில் விமானம் விழுந்து மிதக்கிறது. அதிலிருப்பவர்கள் உதவி கேட்டுக் கதறுகிறார்கள் என்று ஒரு வீடியோ இணையத்தில் உலா வந்தது. அதை கிளிக் செய்தவர்களின் கணினியில் நச்சுமென்பொருள்கள் புகுந்து தகவல்களைத் திருடின. அதிசயங்களில் அடைக்கலமாகும் மனங்கள் அதைப் பற்றியெல்லாம் கவலைப்படுவதில்லையே!

இன்னும் சிலர் ஆசிய கடற்பகுதியிலும் ஒரு பெர்முடா முக்கோணம் உள்ளது என்றனர். சரி உண்மையில் பெர்முடா முக்கோணம் விமானத்தைக் காவு கொண்டிருக்குமா?

புதிர் என்ன?

"மாதநிலா" சஞ்சிகையின் அற்புத படைப்புகளில் ஒன்றான

# "அன்புக்கரம்"

பாடசாலை சென்று கற்பதற்கு கற்றல் உபகரணங்கள் வாங்கிக்கொள்ள முடியாமல் உள்ள மாணவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டதே இந்த "அன்புக்கரம்".

மாணவர்களே! நீங்கள் வறுமையின் நிமித்தம் பாடசாலை உபகரணப்பொருட்கள் வாங்கமுடியாமல் கவலைப்படுகின்றீர்களா? கவலையை விடுங்கள் எங்கள் அன்புக்கரம் உங்களுக்கும் கைகொடுக்கும்.

**எங்களுடைய வழமையான முகவரிக்கு நேரில் வாருங்கள்.**

**வறுமையின் காரணமாக கல்விகற்க முடியாமல் இருக்கும் அனைத்து மாணவர்களுக்காகவும் உருவாக்கப்பட்டதே இந்த அன்புக்கரம்**

"உங்கள் மூன்றாவது கரம்"

**எதிர்பாருங்கள்**

**எமது சஞ்சிகை ஒவ்வொரு மாதத்தின் முதல் ஐந்து நாட்களுக்குள் வெளிவரும்**

என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்


## ஓகன் பயிற்சி வகுப்புக்கள்

**நன்கு தேர்ச்சி பெற்ற ஆசிரியரினால் பிரத்தியேக வகுப்புக்கள் நடைபெறுகின்றன**




தொடர்புகளுக்கு...


**077 900 94 91**




# பேஸ்புக்கில் சுட்டதில் பட்டது










Don't work hard, work Intelligent






பாவம்... இந்த குரங்கையும் எந்த குரங்கு எமாத்திச்சோ....!








வெலிநாட்டில்
நான் வாங்கும் சம்பளம்

என் நண்பர்கள் நினைப்பது

என் உறவினர்கள் நினைப்பது





# சிந்தனைச் சிதறல் 14


## இம்மாதச் சிதறல்




செய்திப் பத்திரிகை

வாசகர்களே!
மாதம் ஒவ்வொன்றிலும்
சிந்தனைச் சிதறலாக வரும் உருவப்படத்திற்கு
உங்கள் ஒவ்வொருவரின் சிந்தனைகளும்
பலதிசைகளில் சிதறுகின்றன. அவைகளை
உணர்வுமிக்க பத்துவரிகளுக்குள் எமது
வழமையான முகவரிக்கு எழுதி
அனுப்புங்கள்

## ஜூலை மாதச் சிதறல்



### பணப்பரிசு பெறும் கவிதைகள்

**1**

கட்டுக்காசு கட்டினால் தான் கல்வி
வெட்டிப்பணம் ஆடுது பார் போதை
துட்டுக்காக செய்த கொலைதானே செய்தி
வட்டி மணி போட்டது பார் குட்டி

**த.பருத்திதாசன்**
தும்பளை வீதி,
தும்பளை, பருத்தித்துறை

**2**

பூகம்பம் நிகழ்ந்தாலும்
பூமியில் குறையாது என் மதிப்பு
பூச்சியங்களுக்குக் கூட
பெறுமானம் வழங்கும்
தீர்க்கதரிசி நானே

**பிரகாசம் சோபனா**
பாரதிபுரம்

**3**

ஈர் முகம் காட்டி
ஓர் நொடியில்
மறுகனம் கைமாறும் பணமே
கற்றவர் பெற்றாலும்
கல்லாதவர் தொட்டாலும்
இக்கனம் இருந்து
மறுகனம் கைமாறும் பணமே
எக்கனமும் புரியாது
உன் குணமே

**என்.ஆனந்தகுமார்**
இல:161/12, சிதம்பரபுரம்.
வவுனியா.

### பாராட்டு பெறும் கவிதைகள்

இறுதியில் கூட உனக்காக
ஒரு குழு
யாருக்கும் இல்லாத மதிப்பு
உனக்குண்டு
இவ்வையகத்தில்
எக்காலமும்

**இ.கவிநிலா**
இல:55. பிரதான வீதி.
திருகோணமலை.

இம்மாயவுலகில் இறுதியாய் உயிர்வாழும்
அன்பு.கருணை. காதல் இவற்றைத்
துடைத்தெறியும் பெறுமதியான ஆயுதம் தான்
பணமென்னும் தாள். உலோகங்கள்...

**மா.சுபாஜினி**
தோணிக்கல்

சிந்தனைச் சிதறலுக்கான
பணப்பரிசு தொகை விபரம்
**1ம் பரிசு 500/-**
**2ம் பரிசு 300/-**
**3ம் பரிசு 200/-**

சிந்தனைச் சிதறலுக்கு
பிரதான அனுசரணை:

## சர்வதேச மொழித்திறன் விருத்தி நிறுவனம்

**ILSDI**

| | | | |
|---|---|---|---|
| French | Deutsch | Italian | Dutch |
| Korean | Danish | English | Sinhala |
| Tamil | IELTS | TOEFL | Ket(A1,A2) |

இம்மாதம் முதல் இடம் மாற்றம்

No:148, Station Road, Vairavapuliyankulam, Vavuniya.
024 5610154 / 077 3493285

# அறிவுக்கு சவால் 12

குறுக்கெழுத்துப் போட்டி (மாதநிலா குட்டீஸ்களுக்கானது)

| | | | |
|---|---|---|---|
| 1 | | 2 | ■ |
| | 3 | | |
| 4 | | | |
| | 7 | | |
| 5 | | ■ | 6 |

**இடமிருந்து வலம்**

1. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் இதுவாகும்.
3. ஐந்தை இரண்டால் பெருக்கினால் வரும்
4. மிக முக்கியமான பாடங்களில் இதுவும் ஒன்று

**மேலிருந்து கீழ்**

2. ..........................................சுகம் தரும்
5. பனை ஓலையில் இதுவும் பின்னலாம் (தலைகீழ்)
6. இதற்கு எல்லையே இல்லை (தலைகீழ்)
7. தச்சுத் தொழில் செய்பவர்கள் அதிகமாக பயன்படுத்துவது

குட்டிஸ்களே! விடைகளை கேள்வி இலக்கத்துடன் சேர்த்து எமக்கு அனுப்பி பரிசில்களை வெல்லுங்கள்

**விடைகளை ஒரு வெள்ளைத்தாளில் எழுதி எங்களுக்கு அனுப்பிவையுங்கள். முற்றிலும் சரியான விடைகளை எழுதுபவர்களில், குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.**

ஜூன் மாதத்திற்கான அறிவுக்கு சவால் போட்டிக்கு ஏராளமான குட்டீஸ்கள் சரியான பதில்களை எழுதி அனுப்பி இருந்தார்கள். அவர்களுக்கு எங்களுடைய வாழ்த்துக்கள். அவற்றிலிருந்து குலுக்கள் மூலம் தெரிவு செய்து பரிசைப் பெறும் 3 குட்டீஸ்கள்.

**சீலன்**
தரம்:4, வ/புளியங்குளம், இந்துக்கல்லூரி.
பரசன்குளம், புளியங்குளம், வவுனியா.

**க.டிலான்**
தரம்:2, வேலாண்குளம்,
வவுனியா.

**தினேஸிகா**
தரம்:4, வ/இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி, வவுனியா.

போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெற்ற அனைத்து வெற்றியாளர்களும் 1ம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எமது தொடர்பிலக்கத்துடன் தொடர்புகொண்டு தங்களுடைய பரிசில்கள் சம்பந்தமான விபரங்களை அறிந்து பெற்றுக்கொள்ளலாம்

போட்டிகளுக்கான விடைகளை மட்டும் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்
பயிற்சிகளை அனுப்பத்தேவையில்லை
அவைகள் நீங்கள் செய்து பழக மாத்திரமே

**1** மே மாதத்திற்கான வர்ணம் தீட்டும் போட்டியில் 1ம் இடத்தைப் பெற்று பரிசில்களை வென்ற போட்டியாளர் யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மடம் தேசிய பாடசாலையில் 4 இல் கல்வி கற்கும் பிறேமினி குருநகர், யாழ்ப்பாணம்

**2** 2ம் இடத்தைப் பெற்று பரிசில்களை வென்ற போட்டியாளர் வவுனியா இறம்பைக்குளம் பாலர் பாடசாலையில் கல்வி கற்கும் சம்பத் - வேப்பங்குளம். வவுனியா.

**3** 3ம் இடத்தைப் பெற்று பரிசில்களை வென்ற போட்டியாளர் வவுனியா புளியங்குளம் இந்துக்கல்லூரியில் தரம் 3 இல் கல்வி கற்கும் தினேஸ் வவுனியா இறம்பைக்குளம் ம.ம.வித்தியாலயம்.

## மாணவர் அரங்கம்

மாணவச் செல்வங்களே,
'மாணவர் அரங்கம்' என்ற பகுதியில் இணைய விரும்புகின்றீர்களா, அப்படியாயின் தங்களுடைய பெயர், முகவரி, தொ.பே.இல, பாடசாலை, வகுப்பு ஆகியவற்றை ஒரு வெள்ளைத்தாளில் எழுதி தங்களுடைய புகைப்படத்துடன் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்

**மாதநிலா சஞ்சிகையை இலங்கையின் எப்பாகத்திலுமுள்ள அனைத்துப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்**

# உங்களுக்குத் தெரியுமா?

- ரோலர் கோஸ்டர் எனப்படும் மிகபெரிய ராட்டினத்தில் பயணம் செய்தால், மூளையில் ரத்தம் கட்டிக்கொள்ள வாய்ப்புகள் அதிகம்.
- சாதாரணமாக கண்களில் காணப்படும் வெண்மை நிறத்திற்கு பதில், நீல நிறத்தை கொண்டிருக்கும் மனிதனின் கண்களுக்கு இருட்டில் காணும் சக்தி அதிகம்.
- எல்லாரும் நினைத்து கொண்டிருப்பதை போல, பணத்தாள்(ருபாய் நோட்டு) காகிதத்தால் செய்யப்பட்டது இல்லை. அது, ஒரு வகை "காட்டன் (cotton) " துணியால் செய்யப்பட்டது.
- ஒரு சிறிது துளி சாராயம் அல்லது மதுபானத்தை ஒரு தேளின் மேல் தெளித்தால், அதனால் தாங்க இயலாது. அந்த தேள் தன்னைத்தானே கொட்டிக்கொண்டு இறக்கும்.
- வெங்காயம் வெட்டும்போது கண்ணீர் வருகிறதா? ஒரு சூயிங்கம் (Chewing gum) மென்றுகொண்டே, வெங்காயம் வெட்டினால் கண்ணீர் வருவது மற்றும் கண்கள் எரிச்சல் பெருமளவு குறையும்.
- உலகின் மிக நீளமான நதி...எகிப்தில் உள்ள நைல் நதி என்பது உங்களுக்கு தெரியும்தானே. ஆனால், அந்த நைல் நதிக்கு அடிப்பரப்பில் இன்னொரு நதி ஒன்று ஓடுகிறது. அதன் தண்ணீரின் அளவு, மேற்பகுதில் ஓடும் நைல் நதியின் தண்ணீரின் அளவை விட ஆறு மடங்கு அதிகம்.
- ஒரு மணிநேரம் தொடர்ந்து நீங்கள் ஹெட்போனை(headpohne) தொடர்ந்து பயன்படுத்தினால், அது உங்கள் காதுகளில் உள்ள கிருமிகளை 700 மடங்கு அதிகரிக்கும்.
- உலகின் அதிக அளவு மனித உயிர்கள் பலியாக காரணமாக இருக்கும் ஒரே உயிரினம்....கொசு.
- ஒரு ஆய்வின்படி, வலது கை பழக்கமுடைய மனிதர்கள், இடது கை பழக்கமுடைய மனிதர்களை விட, சுமார் ஒன்பது வருடங்கள் அதிகமாக வாழ்கிறார்கள்.
- நமது மூளை, ஒரு சிறந்த கணிப்போறியைவிட நுட்பமானது. அதில், சுமார் 100 மில்லியன் நரம்பு செல்கள் உள்ளன.
- ஒரு மனிதன் மரணமடையும்போது, முதலில் செயல் இழக்கும் உறுப்பு..அவனது காதுகள்.
- ஒரு மனிதனின் விழித்திரைகள் 45 சதவிதம் அதிகமாக விரிவடைகின்றன...அவன் தனக்கு பிரியமானவற்றை காணும்பொழுது.
- தேன், மிக எளிதாக ஜீரணமடையும் ஒரு உணவுப்பொருள். ஏன் தெரியுமா? அது ஏற்கனவே தேனீக்களால் ஜீரணிக்கப்பட்டுவிட்டது.
- டைட்டானிக் கப்பலை கட்ட ஆன மொத்த செலவு சுமார் 7 மில்லியன் டாலர்கள். ஆனால், அதை பற்றி ஜேம்ஸ் கேமரூன் படமாக எடுக்க ஆன செலவு சுமார் 200 மில்லியன் டாலர்கள்.
- நீங்கள் உங்கள் கைவிரல்களை "நெட்டி" முறிக்கும்போது ஏற்படும் சத்தத்திற்கு காரணம்...நம் உடம்பில் நைட்ரஜன் வாயுவில் உள்ள குமிழ்கள் உடைவதே.
- ரத்த ஓட்டம் இல்லாத மனித உடலில் உள்ள ஒரே பாகம்...கண்விழித்திரை. அது நேரடியாக காற்றில் இருந்து ஆக்சிஜனை எடுத்துக்கொள்கிறது.

## குழந்தைகள் என்றும் குழந்தைகளே!

ஒரு பையன் ஆசையாக நாய்குட்டி ஒன்று வளர்த்தான், ஒரு நாள் திடீரென்று அந்த நாய்க்குட்டி இறந்து விட்டது. பையன் விடாமல் அழுதுகொண்டே இருந்தான். வீட்டில் எவ்வளவோ ஆறுதல் சொல்லிப் பார்த்தார்கள்.

ஒன்றும் நடக்கவில்லை. அழுகையும் நின்றபாடில்லை.

பிறகு ஒரு மனோதத்துவ டாக்டரிடம் அழைத்துப் போய் கவுன்சிலிங் செய்யச் சொன்னார்கள்.

அவரும் பல ஆறுதல் வார்த்தைகளை சொல்லிவிட்டு கடைசியில் அவனிடம், "இதோ பார் இந்த சின்ன விஷயத்திற்காக ஏன் இப்படி அழுகிறாய்? எங்க தாத்தா கூட போன வாரம் செத்துப் போனார். நான் என்ன அழுகிறேனா பார்" என்றார்.


உடனே அந்தப் பையன் "நீங்க என்ன, என்னை மாதிரி குட்டியில இருந்தா உங்க தாத்தாவை வளர்த்தீங்க?" என்றான் கோபத்தோடு.

டாக்டர் வாயே பேசவில்லை.

குழந்தைகள் என்றும் குழந்தைகளே!



# சமூக ஒற்றுமை



அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்பாளனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் ஆரம்பிக்கின்றேன்.

சமூக ஒற்றுமையை வலியுறுத்தி பல அல்-குர்ஆன் வசனங்களும், ஹதீஸ்களும் காணக்கிடைக்கின்றன அவைகளில் சில...

“நீங்கள் கருத்து வேறுபாடு கொள்ளாதீர்கள் (அவ்வாறு தொண்டால்) கோலைகளாகி விடுவீர்கள். உங்கள் பலமும் குன்றிவிடும்” (08.46)

“இன்னும் நீங்கள் எல்லோரும் அல்லாஹ்வின் (வேதமாகிய) கயிற்றை வலுவாகப் பற்றிப்பிடித்துக்கொள்ளுங்கள். நீங்கள் பிரிந்து விடாதீர்கள். அல்லாஹ் உங்களுக்குக் கொடுத்த நிஃமத்துக்களை நினைத்துப் பாருங்கள் நீங்கள் பகைவர்களாகயிருந்தீர்கள். உங்கள் இதயங்களை அன்பினால் பிணைத்து அவனது அருளால் நீங்கள் சகோதரர்களாய் ஆகிவிட்டீர்கள்” (03-103)

வேகமாக நகர்ந்து கொண்டிருக்கும் இவ்வுலக வாழ்க்கையில் நமது சரியான இலக்கை அடைய வேண்டுமாயின் சமூக ஒற்றுமை எனும் பாதையில் பயணித்தே ஆக வேண்டும் என்ற கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

பல்லாண்டுகளாய் போரில் மூழ்கி இருந்த “அவஸ், கஸ்ரஜ்” ஆகிய இரு சமூகங்களுக்கிடையே நபி (ஸல்) அவர்கள் நிரந்தர ஒற்றுமையை ஏற்படுத்தியமை அவர்களது “ரிஸாலத்” எந்தளவு இதற்கு முக்கியதுவமளித்துள்ளது என்பதை படம்பிடித்துக் காட்டுகிறது.

நபியவர்களுக்குப்பின் அவர்களத தோழர்களை ஸஹா பாக்களும் சஹ வாழ்வின் நெடும் பாதையில் பயணித்தனர் இதன் காரணமாகவே அவர்களது இலட்சியத்தை குறுகிய காலப்பகுதிக்குள் சென்றடைந்தனர்.

இலங்கை என்ற இத்தீபஹறபத்திலே பெரும்பான்மையினத்தவராக பௌத்தர்கள் வசிக்கின்றனர். முஸ்லிம்களாகிய நாம் இந்நாட்டிலே சிறுபான்மையினத்தவராக இருக்கின்றோம்.

இச்சந்தர்ப்பத்திலே இனவாதம், மதபேதம் இன்றி சஹ வாழ்வின் கயிற்றைப் பற்றிப்பிடித்துக்கொள்வது முஸ்லிம்களாகிய எங்கள் மீது தலையாய பொறுப்பாக இருக்கின்றது. எமது பிளவுகளும், பிரிவுகளும் எதிரிகளுக்கோ வலுவூட்டுகின்றது. அதற்குக் காரணமாக அமையும் அனைத்தையும் புறந்தள்ளி ஒற்றுமைக்கான வழிகளைக் கடைப்பிடிப்பதே இன்றைய தேவையாகும்.

வல்ல நாயன் நம்மனைவருக்கும் சுபீட்ச வாழ்வின் அடித்தளமாகிய ஒற்றுமையை பற்றிப்பிடித்துக்கொள்வதற்கு நல்லருள் புரிவானாக ஆமின்.

**மௌலவி.மன்சூர் நௌஷாத்**(Yoosufi)
075 8499070

# மாதநிலா நெஞ்சங்கள்

மாதநிலா ஆசிரியர் அவர்கட்கு.

பல வித்தியாசமான பரிணாமத்தில் பல படைப்புக்களை தாங்கி வருகின்றமை மனதிற்கு இதம் சேர்க்கின்றது. ஆசிரியர் அவர்களே மாதநிலாவின் விடயங்கள் பாராட்டப்பட வேண்டியது. சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவராலும் விரும்பிப் படிக்கக்கூடியதாக உள்ளது. தாங்கள் எம்நாட்டின் படைப்பாளிகள், எழுத்தாளர்களுக்கு முன்னுரிமை கொடுத்தால் சிறப்பாக இருக்கும். இன்னும் வளர்ந்துவரும் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதற்காக பல பக்கங்களை ஒதுக்கியுள்ளீர்கள் வரவேற் கத்தக்கது.

ஜூன் மாதம் கவிதை ஒன்றை அனுப்பியிருந்தேன் இதுவரை பிரசுரிக்கவில்லை. தயவு செய்து பிரசுரியுங்கள்.

சிறுவர்களுக்காக தொகுத்து வழங்கும் போட்டிகள், கட்டுரைகள், கதைகள், பொதுஅறிவு வினா விடைகள், குறுக்கெழுத்துபோட்டிகள் சிறப்பானவை எனது மகளுக்கு ரொம்ப பிடிக்கும்.

உங்களுடைய சேவை தொடர்ந்தும் சிறப்பாக வெளிவர இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**முகம்மது பாத்திமா**
இல:123. நாவல வீதி. ராஜகிரிய.

என்பதால் இன்று ந.பிச்சமூர்த்தியையே புதுக் புதுக்கவிதையின் பிதாமகராகக் கொள்கின்றனர்.

அவரைத் தொடர்ந்து பலர் புதுக் கவிதையில் தம் கருத்துக்களைப் புலப்படுத்தி வருகின்றனர். கவிஞர் முல்லையூர்ரான், முல்லை முஸ்ரிபா முதலான புதுக்கவிதைக் கவிஞர்கள், போல இருவரும் ஆற்றலுள்ள கவிஞராக உருவாக வேண்டும்.

புதுக்கவிதைக்குரிய சிறப்பம்சங்களான படிவம், குறியீடு, தொன்மம் முதலானவற்றைக் கையாள வேண்டும். முல்லைத்தீபன் கவிதைத் துறையில் சிறக்க வாழ்த்தி இத்தொகுப்புக்கு ஆதரவு கொடுக்கும்படி அனைவரையும் வேண்டி நிறைவு செய்கிறேன்.

தமிழறிஞர் கலாநிதி தமிழ்மணி **அகளங்கன்**
தமிழ் அதர்
90. திருநாவற்குளம். வவுனியா.

## ஆங்கிலச் சொல் தருக,

1. குளம் :..............................
2. தலைகவசம்..............................
3. வெங்காயம்:..............................
4. கத்தரிக்காய்..............................
5. அன்னாசி :..............................
6. மூங்கில் :..............................
7. சவ்வரிசி :..............................
8. மஞ்சள் :..............................
9. பன்னீர் :..............................
10. பால் :..............................

## இடைவெளியை கீழ் உள்ள சொற்களை வைத்து நிரப்புக

1. சோம்பம் .............................. தடுக்கும்
2. வேப்பமர உச்சியில் நின்று .............................. ஆடுது....
3. வாகனத்தை செலுத்தும்போது .............................. பாவிப்பது ஆபத்தானது.
4. பாடசாலைக்கு .............................. செல்வது மாணவர்களின் கடமையாகும்.
5. மாதநிலா சஞ்சிகையில் குட்டீஸ்களுக்காக தொகுக்கப்பட்ட சிறுகதையின் தலைப்பு..............................

பேயொன்று, மாதநிலா குட்டீஸ், முன்னேற்றத்தை, குறித்த நேரத்தில், தொலைபேசி,

**இம்மாத குட்டீஸாக அட்டை படத்தை அலங்கரிப்பவர்**

**நவரத்தினம் தோனுஜன்**

புத்தூர், யாழ்ப்பாணம்

"இம்மாத குட்டீஸ்" நீங்களா,
அப்படியாயின் உங்களது
வர்ண புகைப்படத்துடன்
பெயர், முகவரி, பாடசாலை,
வகுப்பு போன்ற விபரங்களையும்
எங்களுக்கு
அனுப்பி வையுங்கள்,
தெரிவு செய்யப்படும்
புகைப்படம்
இம்மாத குட்டீஸ்
பகுதியாக அட்டையில்
பிரசுரிக்கப்படும்.

**(தரம் 7 ற்கு மேற்பட்ட மாணவர்கள் பங்கு பற்ற இயலாது)**

## சிந்திக்கவைக்கும் புதிர் கேள்விகள்


1. ஒரு வீட்டின் முகட்டின் மீது சேவல் முட்டையிட்டால் அது எத்திசையில் விழும்?
2. இரு முதலைகள் பாதையோரமாக நடந்து சென்றன. ஒன்று பெரியது. மற்றையது சிறியது, சிறிய முதலையானது பெரிய முதலையின் மகனாகும். ஆனால் சிறு முதலையின் தந்தையல்ல எனின் யார் இந்த பெரிய முதலை?
3. மின்சாரத்தில் இயங்கும் புகையிரதமென்று 100 மைல் மணி வேகத்தில் மேற்கு திசையை நோக்கி பயணிக்கிற்த. அந்த நேரத்தில் காற்று வடக்கிலிருந்து வீசும் எனில் புகை எத்திசையை நோக்கிச் செல்லும்?
4. ஓர் வீட்டை விட உயரமாக பாய்வதற்கு யாரால் முடியும்?
5. இரு தந்தைகளும் இரு மகன்மாரும் மீன் பிடிக்கச் சென்றனர். ஒவ்வொருவரும் தலா ஒரு மீன் வீதம் பிடித்தனர் ஆனால் பிடிபட்ட மொத்த மீன்கள் மூன்றாகும். அது எப்படி?
6. ஒரு அடி நீளம், ஒரு அடி அகலம், ஒரு அடி உயரமான குழியினுள் இருக்கக் கூடிய பொடிக்கற்களின் எண்ணிக்கை எத்தனை?
7. இரு ஆசிரியர்கள் ஒரே கல் லூரியில் கற்பிக்கின்றனர். அதில் ஒருவர் மற்றையவரின் மகனின் தந்தையாவர். இரு ஆசிரியர்களுக்கிடையான உறவு என்ன?
8. இலங்கையில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒருவரை இந்தியாவில் அடக்கம் செய்ய முடியுமா?
9. இடக்கையால் சுமக்கும் ஒன்றை வலக்கையால் சுமக்க முடியாது. அது எது?

# "மாதநிலாவில் மாதம் ஒரு புத்தகம்"

எழுத்தாளர்களே....! படைப்பாளிகளே....!

உங்கள் புத்தகங்கள் தொடர்பாக எங்கள் பார்வை மாதநிலா வில் இடம்பெற வேண்டுமா....? அப்படியாயின் இரண்டு பிரதிகளை எமக்கு அனுப்பி வையுங்கள்

ஆசிரியர்,
**"மாதநிலா"**
172, மில் வீதி, வவுனியா.




**வே.முல்லைத்தீபனின்...**

## கடவுளிடம் சில கேள்விகள்

-ஒரு பார்வை

"கடவுளிடம் சில கேள்விகள்" என்ற பெயரிலான இக்கவிதைத் தொகுப்பு வே.முல்லைத்தீபன் அவர்களின் சிந்தனையில் உதித்த புதுக்கவிதைகளின் தொகுப்பாக வெளிவருகின்றது.

மணபற்றுக் கொண்ட தீபன் முல்லைத்தீபனாக கவியுலகில் அறிமுகத்தைப் பெறுகிறார். கவிதை மட்டுமன்றி வில்லுப்பாட்டு, தாளலய நாடகம், இசை நாடகம், வடமோடி, தென்மோடி நாட்டுகூத்துக்கள், சமூக நாடகங்கள் எனக் கலைத்துறையில் பங்குபற்றிய அனுபவம் பெற்றுள்ளார்.

செட்டிகுளம் நலன்புரிநிலையத்தில் "நம்பி(க்)கை வை" என்ற தலைப்பில் கவிதை நூலொன்றைக் கையெழுத்துப் பிரதியாக வெளியிட்ட (03.11.2009) யாவற்றையும் இழந்து வந்திருந்த மக்களுக்கு நம்பிக்கையூட்டினார்.

சிறுவயதிலிருந்தே கலை இலக்கிய ஆர்வம் கொண்டிருந்த இவர் வாசிப்பையே சுவாசிப்பாகக் கொண்டவர். பாடசாலை அதிபரான தாய்க்குத் தனித்த பிள்ளையாக, தந்தையை இழந்த துயரில் தவித்த பிள்ளையாக இருக்கும் இவரின் கவிதைகளில் இவரது அனுபவம் வெளிப்படுகிறது.

கடவுளிடம் இவர் கேட்கும் கேள்விகள் உலகியல் அடிப்படையிலும், தர்க்க ரீதியாகவும், விஞ்ஞான அடிப்படையிலும் நியாயமானவையாகவே தெரிகின்றன.

விதியை, ஊழ்வினையை, மறுபிறவியை நம்புகின்ற சமயத்தைச் சேர்ந்தவர்களாக விளங்குகின்ற இந்து சமயத்தவர்கள்தான் கடவுளைத் திட்டுகிறார்கள். கடவுள் மேல் கோபங்கொள்கிறார்கள். இது தான் ஆச்சரியமான விடயம்.

பேரம் பேசும் பக்தியும், காணிக்கையையும், பூசையையும் கடவுளுக்கு இலஞ்சமாக வெளிப்படையாக இல்லாது போனாலும் ஏதோ ஒரு வகையில் அடிமனதில் கொண்டு கொடுக்கின்ற மனப் பாங்கும் தான் இந்துக்களுக்கு கடவுள் மேல் கோபத்தை உண்டுபண்ணுறது. கடவுளைப் பல வகையாகத் திட்டக் கூடிய சுதந்திரம் இதற்குத் துணைசெய்கிறது.

எது எப்படி இருப்பினும் கடவுள் வழிபாட்டின் முதற் பயன்பாடு இவ்வுலக வாழ்வில் இன்பமாக வாழ்தலே என்பதை எவரும் மறுக்க இயலாது. இது தான் இன்றைய யதார்த்தம். ஆன்மீகம் என்பது வேறு.

அந்த வகையில் பல துன்பங்களையும் தன் சிறு பராயத்துக்குள் சந்தித்த இக்கவிஞர் கடவுளைத் திட்டலாம், திட்டியிருக்கலாம். ஆனால் இவர் மிகவும் பண்பாட்டோடு கேள்விகளை மட்டுமே கடவுளிடம் கேட்கிறார்.

இவர் தனது "சுயசரிதை" என்ற கவிதையில் "ஆயிரத்து தொழாயிரத்து / எண்பதுகளில் - நான் / கருவாயிருந்த போது / என்னப்பர் / இல்லாம் போனார்" எனத் தன் வரலாற்றைத் தொடர்கிறார். என் மகனும் - நாளை / இப்படியோர் கவிதை/ எழுதக் கூடாதல்லவா...? எனக் கவிதையை முடிக்கிறார்.

இந்த அறிமுகத்தோடு இவரின் கவிதைகளை வாசித்தால் அதில் ஆழ்ந்திருக்கும் கவி உள்ளத்தைக் காணமுடியும். சோகத்தையும் கோபத்தையும் விளங்கி கொள்ள முடியும்.

தாயே தனித்துணையாக, எல்லாமும் "அம்மா" என்றே வளர்ந்த இவர் "சொர்க்கமும் நரகமும்" என்ற கவிதையில், சொர்க்கம் என்பது / மண்ணிலும் அல்ல / விண்ணிலும் அல்ல – உன் / மடியில் தானம்மா.... என்று சொல்லும் போதும், நரகமென்பதோ/ உன்னைவிட்டு/பிரிதல் தானம்மா.... என்று செல்லும்போது எல்லோருக்கும் அது உண்மையாகவே தென்படும்.

ஒரு குழந்தைக்கு தாய் மேலுள்ள பாசத்தைப் போல வேறு யாருக்கும்/ யார் மேலும் இருக்க முடியாது. முழுமையான தாயன்பை அனுபவித்த தீபனின் வார்த்தைகள் இதை இன்னும் வலுப்படுத்துகின்றது. "தாயிற் சிறந்த தயாவான தத்துவனே" என்று மாணிக்கவாசகர் பாடுகின்ற பாடல்வரியின் பெறுமதியை தீபன் உணர்ந்தவர். கடவுளைத் தாயோடு ஒப்பிடும் தேவை மணிவாசகருக்கு இருந்தது மனங்கொள்ளத்தக்கது.

"எப்படி வருவாய்/கல்லறை விட்டெழுந்து" என்று காதலியைக் கேட்பது இவரின் தனிப்பட்ட சோகமே" குருத்தின் கவலை" என்ற கவிதையில்.....

"குருத்தோலை யொன்று

வாய்விட்டு அழுகிறது

காய்ந்து விழும்

காவோலைகளை நினைத்தல்ல

நாளை துளிர்ப்பதற்காய்

காத்திருக்கும் ஆயிரமாயிரம்

குருத்தோலைகளை நினைத்து

என இன்றைய யதார்த்தத்தை அழகாகக் காட்டுகிறார் "ஓரிதயத்தினுள்ளே" இது விஞ்ஞான காதலாகும். "இருட்டறை" என்ற கவிதை உருவக கவிதையாகும்.

நுளம்புகளும்

இலையான்களும்

மணிக்கணக்காய்

மொய்க்கின்றன

கடைசி வரையும்...

நான் குப்பையல்ல.

என அருமையாச் சொல்கிறார் கவிஞர்.இக் கவிதையில், எலி, பல்லி, சேவல், எனப் பல உயிரினங்களையும் சம்பந்தப்படுத்தி "புலரும் பொழுதைப் பார்த்துக் கொண்டு.... என கூறிச் செல்லும் போது இவரது புதுக் கவிதை புனையும் ஆற்றல் புலப்படுகிறது. விளக்கினால் சுவைபோகும். விளங்கிக்கொள்ளுங்கள்.

"ஏக்கம்" என்ற கவிதையில் " தவறுகள் செய்யிலும் – கல / கதவுகள் திறக்குது... என கோபப்படுகிறார். கவிஞர். "குருட்டுக்கடவுள்கள்" என்ற கவிதையில் ஒரு தொன்மத்தை மாற்றியமைத்திருக்கிறார்.

இருபத்தோராம் நூற்றாண்டாகியும்

சிலுவையின்னுமே இயேசுவை

சுமந்துதானிருக்கிறது.

இத் தொன்ம முரண்பாடு கருத்திலும் முரண்பாட்டையே காட்டுகிறது. "எஞ்சியது(ம்) என்ன? என்ற கவிதையில்

மாலையிட்ட

மக்களுக்கு

மிஞ்சிய தெல்லாம்

மலர் வளையங்களே"

என்ற வரிகளும் "குருட்டுக் கடவுள்கள்" என்ற கவிதையில் வரும்.

"சுற்றுலாக்கள்

சுடலைகளையும்

சுகமான நகரமாக

சுற்றிப்பார்க்கிறது.

என்ற வரிகளும் "காவோலைகளை/ காசோலைகளாக்கிட/ குருத்தோலைகளும்/காலம் பார்க்கிறது" என்ற பல வரிகளும் வெறும் கானல் வரிகள் அல்ல. யதார்த்தமே.

இத்தனைக்கும் அப்பாலும்

கண்கண்ட கடவுள்கள்

கூட குருடாயிருப்பதன்

கோட்பாடுதானென்ன....?

எனக் கேட்டுத் தன் கோபத்தை வெளிப்படுத்துகிறார் கவிஞர். எங்களுக்கும் வெளிநாட்டில் சொந்தகாரருண்டு" என்ற கவிதையில் வெளிநாட்டில் உள்ளோருக்கு ஒரு வேண்டுகோளை மிகவும் வினயமாகப் பின்வருமாறு விடுக்கிறார் கவிஞர்.

கோபுரத்திற்கு

கொட்டிக் கொடுப்பதுடன்

அதைச் சுற்றியுள்ள

குடில்களுக்கு ஆயிரத்திலாவது

கூரையமைத்துக் கொடுத்தாலேன்ன?

என்கிறார். "கடவுளிடம் சில கேள்விகள்" என்ற தலைப்பிலான கவிதையில் பஞ்சபுராணங்கள்/பாடியவுண் பிஞ்சுகள்/ பிஞ்சு போன வேளை / பஞ்சிப்பட்டு நீயெங்கே /படுத்திருந்தாயோ" எனக் கடவுளிடம் கேட்பது இவரது விரத்தியின் உச்சக்கட்ட வெளிப்பாடே.

தமிழ் புதுக் கவிதையின் முன்னோடி பாரதியே. இருப்பினும் ந.பிச்சமூர்த்தியின் "குயிலின் சுருதி" என்ற நூலே முதன்முதல் நூலக வெளிவந்த புதுக்கவிதை நூல்

(10ம் பக்கம் பார்க்க)

# மாதநிலா குட்டீஸ்

## சிறுகதை

### பழி சொல்

குறுஞ்சி என்ற ஊரில் முனுசாமி என்ற ஒருவன் இருந்தான். அவன் ஒரு முறை தேவையில்லாமல் ஒரு கிராமவாசி மீது பழி சொல்லி பஞ்சாயத்தைக் கூட்டினான்.

பஞ்சாயத்திலும் கிராமவாசிக்குத் தண்டனை கிடைத்தது. பின், வீட்டிற்கு வந்த முனுசாமியின் மனசாட்சி அவனை உறுத்தியது. கிராமவாசி மீது தான் பழி சொன்னதை எண்ணி வருந்தினான். எனவே, தன் பாவத்திற்கு ஏதாவது பிராயச்சித்தம் உண்டா என்று தேடினான்.

என்ன பிராயச்சித்தம் செய்வதென்று அவனுக்குப் புரியவில்லை. எனவே, அந்த ஊரிலிருந்த ஒரு துறவியிடம் சென்றான். "துறவியாரே! நான் இந்தக் கிராமத்தில் வசிக்கும் ஒருவர் மீது வீண் பழி சொல்லிவிட்டேன். அது என் மனத்தை உறுத்துகிறது. அந்தப் பழி சொன்ன பாவத்தில் இருந்து தப்பிக்க எனக்கு வழி கூறுங்கள்!" என்று கேட்டான்.

துறவி சிறிது யோசித்துவிட்டு, "இன்று இரவு ஐந்து கிலோ இலவம்பஞ்சை எடுத்துப் போய் அந்த கிராமவாசியின் வீட்டுக்கு முன்பு பரப்பிப் போட்டுவிட்டு வந்து விடு. நாளை வந்து என்னைப் பார்," என்று கூறினார்.

முனுசாமியிடம் பஞ்சைக் கொண்டு சென்று கிராமவாசியின் வீட்டின் முன் பரப்பி விட்டான். பின் மறுநாள் சென்று துறவியைப் பார்த்தான். "துறவியாரே! என் பாவம் போய் இருக்குமா இந்நேரம்?" என்று கேட்டான்.

உடனே துறவி, "முனுசாமி! நீ இப்போது அந்த கிராமவாசியின் வீட்டிற்குச் செல். அவன் வீட்டு முன் நீ நேற்றிரவு பரப்பி வைத்த பஞ்சை மீண்டும் பொறுக்கிக்கொண்டு வா," என்று கூறினார்.

முனுசாமி மிகுந்த ஆவலுடன் ஓடினான். ஆனால், ஒரு விரல் அளவு பஞ்சு கூட அங்கு இல்லை. எல்லாம் காற்றில் பறந்துபோய் விட்டிருந்தது. அதனைக் கண்ட முனுசாமி திடுக்கிட்டான். மீண்டும் துறயிடம் ஓடி வந்தான்.

"துறவியாரே! நேற்றிரவு நான் கிராமவாசி வீட்டின் முன்னால் போட்டுவிட்டு வந்த பஞ்சில் ஒரு துளிப் பஞ்சாவது இப்போது அங்கு இல்லை. என்ன செய்வது?" என்று கேட்டான்.

துறவி சிரித்துவிட்டு, "முனுசாமி! நீ விரித்துப் போட்டுவிட்டு வந்த பஞ்சை இப்போது மீண்டும் எப்படி அள்ள முடியாதோ, அதே போல, நீ ஒருவர் மீது கூறிய பழியையும் அதனால் உனக்கு ஏற்பட்ட பாவத்தையும் மாற்ற முடியாது. திருப்பி வார முடியாத பஞ்சைப் போன்றது தான் உன் பழிச் சொற்களும். அவற்றையும் இனித் திருப்பி வார முடியாது. இறைவனிடம் உன் தவறுக்காக மன்னிப்பு கேள்," என்று கூறினார்.

முனுசாமிக்கு உண்மை புரிந்தது. அன்று முதல் மற்றவர்கள் மீது பழி சொல்லும் குணத்தையே விட்டுவிட்டான். பிறர் மீது வீண் பழி சுமத்துவதால் பலன் ஏதும் கிடைக்கப்போவதில்லை என்பதை உணர்ந்தான் முனுசாமி.



# ஏண்டா இத முதல்ல சொல்லியிருக்கலாமே


என்னடா முனியா நான் ஊர்ல இல்லாதப்ப
ஏதும் விசேஷம் உண்டா?
பெருசா ஒன்னும் இல்லீங்க நம்ம நாய்
செத்துப்போச்சு...
அடக்கடவுளே எப்படிடா திடீர்ன்னுசெத்துச்சு?
கெட்டுப்போன மாட்டுக்கறியை தின்னுடுச்சுங்க.
மாட்டுக்கறி எங்கடா கிடைச்சது அதுக்கு?
நம்ம வீட்ல தாங்க
நாம தான் மாட்டுக்கறி திங்கிறதில்லையே !!?,
நெருப்புல அவிஞ்சி போன மாடு மூனு நாலா
கிடந்து கெட்டுப்போச்சுங்க. அதைத்தான் நாய்
தின்னிடுச்சு.
நம்ம மாடா?
ஆமாங்க
அய்யய்யோ.!! எப்படிடா எரிஞ்சி போச்சு..!?
நம்ம வீடு எறியும் பொது நெருப்பு பறந்து
மாட்டுக்கொட்டகை யில் விழுந்துரிச்சு.
வீடு எப்படிடா எரிஞ்சது.?
குத்து விளக்கு விழுந்து தீ பரவிடிச்சுங்க..
குத்து விளக்கு ஏத்துற பழக்கமே நம்ம வீட்டுல
கிடையாதேடா!
அதுக்காக செத்தவங்க தலைக்கு விளக்கு
வைக்காம இருக்க முடியுமா?
யார்ரா செத்தது?
உங்க அம்மா
எப்படிடா செத்தாங்க?
தூக்கு போட்டுக்கிட்டு. ..
ஏன்டா?
அவமானத்தில்தான்
என்னடா அவமானம்?
வீட்டுல இருக்குற பொண்ணு ஒருத்தன் கூட
ஓடிப்போனா ஊரு காறித்துப்பாதா...?
ஓடிப்போனது யாருடா?
உங்க பொண்டாட்டிதான்..

எங்கம்மா ஊர்ல இருந்து
வந்தாங்கன்னா என் வீடு
கோயில் மாதிரி ஆயிடும்
எப்படி
என் மனைவி
பத்ரகாளி ஆயிடுவாளே



## எதிர்ச் சொல் தருக.

1. நேர்வழி :..........................
2. கடவுள் :..........................
3. பிறப்பு :..........................
4. சுடுநீர் :..........................
5. ஆண் :..........................
6. பூ :..........................
7. கடன் வாங்குதல் :..........................
8. வேகம் :..........................
9. எழும்பு :..........................
10. நினைத்தல் :..........................



## மேலே உள்ள படத்தைப் பார்த்து கீழே உள்ள கட்டத்தில் வரைக

# இந்திய பிரதமர் நரேந்திர மோடி மயிரிலையில் உயிர் தப்பினார்




உக்ரைனில் சுட்டு வீழ்த்தப்பட்ட மலேசிய விமானத்தின் பின்னால் அதே வான்வழியில் பிரதமர் நரேந்திர மோடி பயணித்த விமானமும் வந்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

உக்ரைனில் மலேசியன் ஏர்லைன்ஸ் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதில் அதில் பயணித்த 298 பேரும் உயிரிழந்தனர். கிழக்கு உக்ரைனில் சுட்டு வீழ்த்தப்பட்ட மலேசிய விமானம், கிரபோவோ என்ற கிராமம் அருகே விழுந்தது.

இந்நிலையில் சுட்டு வீழ்த்தப்பட்ட மலேசிய விமானத்தின் பின்னால் அதே வான்வழியில் பிரதமர் நரேந்திர மோடி பயணித்த விமானமும் வந்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளது.

மலேசிய விமானம் ஏவுகணை தாக்குதலில் வீழ்த்தப்பட்டிருக்காவிட்டால் சம்பவம் நடந்த பகுதி வழியாகவே பிரதமர் நரேந்திர மோடி பயணித்த ஏர் இந்தியா–001 விமானமும் சென்றிருக்கும் என்ற பரபரப்பு தகவல் வெளியாகியுளது.

பிரதமர் நரேந்திர மோடி சென்ற ஏர் இந்தியா–001 விமானம் ஜெர்மனியின் பிராங்ஃபர்ட் நகரில் இருந்து 11.22 (ஜி.எம்.டி) மணிக்கு புறப்பட்டது.

மலேசிய விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட 1 மணி நேரத்தில் மோடியின் விமானமும் உக்ரைன் பிளைட் இன்பர்மேஷன் ரீஜனில் பறந்திருக்கும். ஆனால், விமான ஓட்டி சாதுர்யமாக யோசித்து பயணத்தடத்தை மாற்றியிருக்கிறார் என்று விமான அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

உக்ரைனில் சண்டை நடைபெற்று வரும் நிலையில் ஐரோப்பிய நாடுகளில் இருந்து வரும் விமானங்கள் உக்ரைன் மீதான லிவைவ் வழித்தடம், சிம்ஃபெர்பூல் வழித்தடம் ஆகிய இரண்டு மார்க்கங்களிலேயே சென்று வந்தன.


ஆனால் கடந்த ஏப்ரலில் ஐ.நா விமானப் போக்குவரத்து ஆணையம் வெளியிட்ட உத்தரவின் பேரில் அனைத்து விமானங்களும் லிவைவ் வழித்தடத்தை மட்டுமே பயன்படுத்தத் தொடங்கின.

பாதுகாப்பு காரணங்களுக்காக ஐ.நா இந்த உத்தரவை பிறப்பித்தது. பிரதமர் மோடி சென்ற விமானமும் லிவைவ் வழித்தடத்திலேயே சென்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## 11ம் பக்கத்திற்கான விடைகள்

1.சேவல் முட்டையிடாது
2.தாய்
3.மின்சாரத்தில் இயங்கும் புகையிரதத்தில் புகை வராது
4.எல்லோராலும் முடியும் எனில் விட்டால் பாய முடியாது
5.மகன், தந்தை பாட்டன் மூவருமே மீன் பிடித்தனர்.
6.பூச்சியம், குழியினுள் ஏதும் இருக்காது
7.கணவன் – மனைவி
8.முடியாது அவர் இன்னும் உயிருடன் இருக்கிறார்.
9.இடது முன்னங்கை.

## புள்ளிகளை இணைத்து ஒளிந்திருப்பவரை கண்டு பிடியுங்கள் குட்டீஸ்களே!



## உண்மைதான்!

கடவுள் ஒரு நாள் கழுதையை படைத்து அதனிடம் சொன்னார், "நீ ஒரு கழுதை. காலை முதல் மாலை வரைக்கும் நீ உழைக்க வேண்டும். உன் மேல் சுமைகள் இருக்கும். நீ புல் தான் சாப்பிட வேண்டும். உனக்கு அவ்வளவாக அறிவு இருக்காது. நீ 50 வருடங்களுக்கு வாழ்வாய். இதற்கு கழுதை சொன்னது "நான் கழுதையாக இருக்கிறேன். ஆனா 50 வருடம் ரொம்ப அதிகம். எனக்கு 20 வருடம் போதும்." கடவுள் கழுதையின் ஆசையை நிறைவேற்றினார். அடுத்து ஒரு நாயை படைத்து அதனிடம் சொன்னார் "நீ மனிதனின் வீட்டைகாக்கும் காவலன். அவனுடைய அன்பு தோழனாக இருப்பாய். மனிதன் உண்ட பிறகு உனக்கு கொடுப்பான். நீ 30 வருடங்களுக்கு வாழ்வாய்." இதற்கு நாய் கூறியது, "கடவுளே, 30 வருஷம் ரொம்ப அதிகம். எனக்கு 15 வருஷம் போதும்" கடவுள் நாயின் ஆசையை நிறைவேற்றினார். அடுத்து கடவுள் குரங்கை படைத்து அதனிடம் சொன்னார் "நீ ஒரு குரங்கு. மரத்திற்கு மரம் தாவ வேண்டும். நீ வித்தைகள் காட்டி மற்றவர்களை மகிழ்விப்பாய். நீ 20 வருடங்களுக்கு வாழ்வாய்." இதற்கு குரங்கு கூறியது "20 வருஷம் ரொம்ப அதிகம். 10 வருஷம் போதும்"

கடவுளும் குரங்கின்ஆசையை நிறைவேற்றினார். கடைசியாக மனிதனை படைத்து அவனிடம் சொன்னார் " நீ ஒரு மனிதன். உலகில் உள்ள ஆறு அறிவு ஜீவன் நீ மட்டுமே. உன் அறிவை கொண்டு மற்ற மிருகங்களை ஆட்சி செய்வாய். உலகமே உன்கையில். நீ 20 வருடங்களுக்கு வாழ்வாய்." இதற்கு மனிதன் கூறினான் "20 வருஷம் ரொம்ப குறைவு. கழுதை வேண்டாம் என்ற 30 வருடங்களையும், நாய் வேண்டாம் என்ற 15 வருடங்களையும், குரங்கு வேண்டாம் என்ற 10 வருடங்களையும் எனக்கு கொடுத்து விடு" கடவுள் மனிதனின் ஆசையை நிறைவேற்றினான். அன்று முதல் மனிதன் முதல் 20 வருடங்களை ஜாலியாக வாழ்கிறான் மனிதனாக. கல்யாணம் செய்து கொண்டு அடுத்த 30 வருடங்களை கழுதை போல் எல்லாம் சுமைகளை தாங்கி கொண்டு, அல்லும் பகலும் உழைக்கிறான். குழந்தைகள் வளர்ந்தபிறகு, அடுத்த 15 வருடங்களுக்கு அவன் வீட்டின் நாயாக இருந்து, அனைவரையும் பாதுகாத்து கொள்கிறான். மிச்ச மீதி உள்ளதை சாப்பிடுகிறான். வயதாகி, Retire ஆன பிறகு குரங்கு போல் 10 வருடங்களுக்கு மகன் வீட்டிலிருந்து மகள் வீட்டிற்கும், மகள் வீட்டிலிருந்து மகன் வீட்டிற்கும் தாவி, தன் பேரகுழந்தைகளுக்கு வித்தைகள் காட்டி மகிழ்விக்கிறான்... இப்ப தெரியுதா நம்ம ஏன் இப்படி இருக்கிறம் என்று?

# நீரிலிவினைக் கட்டுப்படுத்தும் நாவற்பழம்

எளிமையும் வலிமையும் கொண்ட அருமையான பழம் நாவல் பழமாகும்.

நாவல் பழம் சாப்பிட்டால் நாவின் நிறம் கருமையாக மாறும். நாக்கு வறண்டு தண்ணீர் தாகம் அதிகமாகும். நாவின் தன்மையை மாற்றுவதால் நா அல் (நாவல்) என்றனர். வழக்கில் பல இடங்களில் நவாப்பழம் என்றும், நாகப்பழம் என்றும் அழைக்கப்படுகிறது.

கோடை விடுமுறை தொடங்கும்போது நாவல் மரத்தில் ஏறி, கிளைகளைப் பிடித்து ஆட்டி உலுக்கி, விழும் பழங்களை நண்பர் கூட்டத்துடன் எடுத்துச் சாப்பிடும்போது இருக்கும் சுவையே தனிச்சுவைதான்.

கனிமங்கள், புரதங்கள், சுண்ணாம்புச் சத்துடன் அதிக அளவு இரும்புச் சத்தையும் கொண்டுள்ளது நாவல் பழம்.

உடம்பில் ஏற்படும் நோயின் தாக்கத்தைக் குறைக்கும் ஆற்றலைக் கொண்ட நாவல் பழம் சிறுநீரகத்தையும் சீராகச் செயல்பட வைக்கும். செரிமானக் கோளாறுகளை நீக்கி, குடல் தசைகளை வலுவடையச் செய்து பசியைத் தூண்டும் இயல்புடையது. ரத்தக் கொதிப்பு மற்றும் நீர்க்கடுப்பிற்கும் சிறந்தது.

இதயத் தசைகளை உறுதிப்படுத்தும். கல்லீரல் பிரச்சினைகள், குடற்புண், மூலநோய் மற்றும் மண்ணீரல் பாதிப்புகளுக்கும் சிறந்தது. இரத்தத்தைச் சுத்திகரித்து விருத்தி செய்யும். பித்தத்தைத் தணிக்கும். நாக்கு மற்றும் பல் ஈறுகளைச் சுத்தம் செய்யும். சிறுநீர்ச் சுருக்கினைக் குணமாக்கி, உடம்புக்கும் கண்ணுக்கும் குளிர்ச்சி தரும்.

மனித உடம்பில் கணையத்தின் தன்மை துவர்ப்புச் சுவையின் தன்மையைக் கொண்டதாகும். இந்தக் கணையத்திலிருந்துதான் இன்சுலின் சுரக்கிறது. கணையத்தில் துவர்ப்பின் ஆதிக்கம் குறையும்போது இன்சுலின் சுரப்பு குறைகிறது. இன்சுலின் குறையும்போது நீரிழிவு நோய் ஏற்படுகிறது.

நாவல் பழத்தின் விதையில் ஜம்போலைன் என்ற

(18ம் பக்கம் பார்க்க)

# பெரிய வீட்டு கமலி

–காதல் தொடர்கதை

நீங்க போங்க தண்ணீர் கொண்டு வரேன்'

'சரிங்க'

மீண்டும் ஆரம்பித்தது செந்திலுக்கும் எனக்குமான பேச்சு. எங்கள் வீட்டம்மாவும், கமலியும் மீண்டும் பேச ஆரம்பிக்க, குழந்தைகள் தொலைக்காட்சியில் மூழ்கி இருந்தார்கள்.

செந்தில்தான் கேட்டார் 'ஏங்க நீங்க கமலியைத் தேடவே இல்லையா?'

'இல்லீங்க, வேலை கிடைச்ச பிறகு அதுக்கே நேரம் சரியாப்போச்சு. பிற்பாடு கல்யாணம், வாரிசுகள். மறந்துட்டேங்க' என்ற போது இருவருமே அடக்க முடியாமல் சிரித்துவிட்டிருந்தோம்.

ஓஹ், நானும் சிரித்திருக்கேன், அப்போ அது உண்மைதான். எனக்கு இந்தக் காதல் மறந்து போச்சு, காதல் கூட மறந்து போவுமா என்ன?

'காலம் என்னத்தையெல்லாம் மறக்க வெக்குது பார்த்தீங்களா அன்பு', என்றார் செந்தில். பிறகு நிறைய பேசினோம். காதல் பேச்சு, அத்தோடு முடிந்து போனது. கிளம்பும் நேரம் வர இரவு சாப்பாட்டை கட்டி குடுத்தனுப்பினாள் கமலி. அடுத்த வாரம் அவளின் குடும்பம் எங்கள் வீட்டிற்கு வருவதாய் என் மனைவிடம் வாக்களித்தாள் கமலி, நான் என் வாரிகள் வண்டியில் அமர்ந்திருக்க பெண்கள் இருவரும் பேசிக்கொண்டே இருந்தார்கள் 'அடுத்த வாரம் பேசிக்கலாம்மா, இல்லாட்டி ஃபோன்ல பேசிக்குங்க. வா நேரமாச்சு' என்ற என் குரல் கேட்டு வந்தமர்ந்தாள் மனைவி. வண்டியைக் கிளப்பினேன்.

வெகு திருப்தியுடன் அமைந்தது அந்தச் சந்திப்பு. 20 வருடம் இதற்காகவா காத்திருந்தோம். ஏன் சந்தித்தோம்? ஏன் குடும்பத்தோடு வந்தோம்? பேசினோம்? எல்லாம் கனவு போல ஓடியது. சாலையின் இரு ஓரங்களிலும் மரங்கள் வேகமாய் பின்னோக்கி வேகமாய் ஓட ஆரம்பித்தது. நிறைவேறாத ஆசை ஏதோ இன்று நிறைவேறியது போன்றதொரு நினைப்பு. மனைவியைப் பார்த்தேன், களைப்பில் தூங்க ஆரம்பித்திருந்தாள், என் குழந்தைகளும்.

எனக்கும் கமலிக்கு இடையே இருந்த காதல் ஒரு நொடிப்பொழுதில் ஆரம்பித்து அதே நொடியில் முடிந்தும் போனதுதான் விந்தையாக இருந்தது. காலையில் கிளம்பும் போது மனது முழுக்க கேள்விகள், திரும்பும் போதோ....

அங்கே மீதி இருந்தது நட்பு தோய்ந்த அன்பு மட்டுமே.

(முற்றும்)

குளுக்கோசைட் உள்ளது. இதன் செயல்பாடு உடம்புக்குள் ஸ்டார்ச்சை சர்க்கரையாக மாற்றும் செயலினைத் தடுக்கிறது. எனவே, நாவல் பழம் சாப்பிட்டால் நீரிழிவு நோய் கட்டுப்பாட்டில் இருக்கும் என்று லக்னோவில் உள்ள நீரிழிவு நோய் ஆராய்ச்சி மய்யத்தில் நடைபெற்ற ஆய்வில் தெரிய வந்துள்ளது. நாவல் பழத்தில் நீளவாட்டில் பெரியதாக இருப்பதில் இனிப்புச் சுவை அதிகம் இருக்கும். உருண்டை வடிவில் இருக்கும் பழமே மருத்துவ குணம் உடையது.

இத்தகு சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ள நாவல் பழத்தினை அளவுடன் சாப்பிட்டு, அதன் அளவில்லாப் பயன்களைப் பெற்று மகிழ்வோம்.


## பொது அறிவு

1 வானவில்லின் முதல் நிறம் என்ன?
ஊதா
2. வானவில்லின் இறுதி நிறம் என்ன?
சிவப்பு
3. சமூகத்தின் மிகச்சிறிய அலகு எது?
குடும்பம்
4. இந்து மதத்தின் மறுபெயர் என்ன?
சனாதனதர்மம்
5. தமிழில் உள்ள வருடங்கள் எத்தனை?
60 வருடங்கள்
6. தமிழ் தட்டச்சின் தந்தை யார்?
இ.முத்தையா
7. இலங்கை இந்துக்கல்வியின் தந்தை யார்?
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்
8. தமிழ்த்தாத்தா என அழைக்கப்படுபவர் யார்?
உ.வே.சுவாமிநாதஐயர்
9. தங்கத்தாத்தா என அழைக்கப்படுபவர் யார்?
நவாலியூர் சோமசுந்தரப்புலவர்
10. ஆசுகவி என அழைக்கப்படும் ஈழத்துப்புலவர்
கல்லடி சு.வேலுப்பிள்ளை

கி.சதுர்சிகன்
அரசன்குளம், ஓமந்தை.

# சித்தமருத்துவமும் மனித வாழ்வும்

## 2



**இராஜ்மோகன் மனோராஜ்**
(யாழ் பல்கலைக்கழக சித்தமருத்துவ
4ம் வருட மாணவன்)

இதேபோல் தூசியினால் தடிமல் ஏற்படலாம், தொண்டையில் ஏற்படும் (டொன்சில்ஸ்) தடிமல் ஏற்படலாம், எல்லாவற்றைக்கும் நிவாரணியாக நாம் உடனே தலைவலி மாத்திரையை பாவிப்பது அன்றாடம் நடக்கிறது... இதே போன்றே மற்றநோய்களும் நோய் ஏற்படும்போது தகுந்த மருத்துவரை நாடியே சிகிச்சை பெற வேண்டும். மருத்துவரை சந்திக்கும்போது நமது நோய் குறித்து விளக்கமாக எடுத்துரைக்க கூடியதாக இருக்க வேண்டும் அதுமுதல் முக்கியமானதாகும்.

எனவே நமது நோய்க்கு அடிப்படைக்காரணங்கள் பலவாக இருந்தபோதும் அவற்றுக்கு எமது உணவுப் பழக்க வழக்க முறையும் ஒரு காரணமாகவுள்ளது. எனவே உணவே மருந்து என்ற அடிப்படையில் சித்த மருத்துவத்துடன் தொடர்புபட்ட சில விடயங்களை தொடர்ந்து எழுதுவது நல்லதென கருதுவதுடன் அதனைத் தொடர்ந்து நோய்கள் அறிகுறிகள் ஏற்படுவதற்கான காரணங்கள் தடுக்கும் வழிமுறைகள் என்பனவற்றை ஆராயலாமென கருதுகிறேன். உணவே மருந்து என்கின்ற விடயத்தை நாம் எடுத்துநோக்கும்போது இன்னொருவிடயம் நமக்கு முன்வருகிறது அது அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்கின்ற வியடமாகும். இவையிரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட விடயங்களே எதற்குமே ஒரு அளவுண்டு என்பதே முக்கியமானதான விடயமாகும். நான் ஏற்கனவே தலைவலி மாத்திரைகள் பற்றி குறிப்பிட்டிருந்தேன் அவைகள் கூட மருத்துவர்களின் சிபாரிசுகளின்றி அடிக்கடி பாவிப்பது ஆபத்தானதாகும். தலைவலிக்கான காரணத்தையறிந்து உரிய மருத்துவரிடம் சிகிச்சை பெற வேண்டும். இது கடந்த காலத்தின் குறிப்பிலும் குறிப்பிட்டிருந்தேன். உயிர்வாழ்வதற்காகவே உணவு உண்ண வேண்டும். சிலர் உணவு உண்பதற்காகவே உயிர்வாழ்வதனையும் நாம் பத்திரிகைகள் மூலம் காண்கின்றோம். அதாவது பருத்த உடம்புக்காரர். எடை கூடிய மனிதர் என தினம் பத்திரிகைகளில் காண்கின்றோம். எனினும் தற்போது 40 வயதை தாண்டியவர்களின் ஒருசிலரைதவிர மற்றய எல்லோரும் உணவை மருந்தாக உண்பதை நாம் அன்றாடம் காண்கின்றோம். என்று முதல் அவர் உணவை அளவாகவும் சில குறிப்பிட்ட உணவுகளை மட்டும் உண்ண ஆரம்பிக்கின்றாரோ அன்று முதல் அவர் பல காலம் உயிர் வாழ்வதற்காக உண்ணத் துவங்கி விட்டார் என்பதே உண்மை விடயமாகும். எமது தமிழ் மக்கள் அரிசி உண்பதில் அதிக அக்கறையுள்ளவர்கள் அரிசியால் வயிற்றை நிரப்புகபவர்கள் அதிகமுள்ளர். தமது உணவை கலப்புனவாக்கி அரிசியின் அளவை குறைத்தல் வேண்டும். நார்ச் சத்துள்ள மரக்கறி வகைகள் அதிகமாக சாப்பிட வேண்டும். மேலும் சோளம், கேழ்வரகு, பயறு, உழுந்து போன்றளவும் சமமாக சாப்பாட்டில் சேர்த்துக்கொள்வது நலமானது. போதிய சத்துக்கள் இவற்றிலுள்ளது. நாம் இன்றைய உலகில் மிக வேமாக பலதுறைகளில் வளர்ச்சியடைந்து செல்கின்ற நிலையும் போட்டி பொருளாதார வளர்ச்சிமுறைகளால் ஏற்படுகின்ற பல பிரச்சினைகளை அன்றாடம் காணமுடிகிறது. அவற்றில் ஒன்று உற்பத்தி முறைகளிலான வளர்ச்சி முறைகள் இன்றைய விவசாய உற்பத்திகளில் கூடுதலானவைகள் விதைகளிலிருந்து பயன்வரை பல இரசாயக வகை மருத்துவ பொருட்கள் பாவிக்கப்படுகின்றது. ஆகவே எமது உணவு வகைகள் மூலம் பல இரசாயன சேர்க்கைகள் எமது உடலுக்கு செல்ல வாய்ப்பாகிறது. இதன்மூலம் பல பொருட்கள் பாவிக்கப்படுகின்றது. ஆகவே எமது உணவு வகைகள் மூலம் பல இரசாயன சேர்க்கைகள் எமது உடலுக்கு செல்ல வாய்ப்பாகிறது. இதன்மூலம் பல நோய்களுக்கு இது காரணமாகவுள்ளது..

(தொடரும்...)

# 15 லட்சத்திற்கு விற்றது ஹன்சிகாவின் ஒரு ஓவியம்!



நடிகை ஹன்சிகா நடிப்பு தவிர அவர் ஒரு ஓவியரும் கூட. அவர் தான் வரைந்த ஓவியங்களை கொண்டு ஒரு கண்காட்சி நடத்தி அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை தான் நடத்தி வரும் குழந்தைகள் நலபாதுகாப்பு அறக்கட்டளைக்கு வழங்க தீர்மானித்திருக்கிறார்.

இதற்கிடையில் ஹன்சிகா வரைந்த ஓவியம் ஒன்றை ஒருவர் 15 லட்சம் ரூபாய்க்கு வாங்கி அந்த பணத்தை குழந்தைகளின் அறக்கட்டளைக்கு வழங்கி உள்ளார்.


இதுகுறித்து ஹன்சிகாவின் தாயார் டாக்டர் மோனா கூறியிருப்பதாவது: ஹன்சிகாவை தேடி அவரது ரசிகரும், எங்கள் குடும்ப நண்பருமான ஒருவர் வீட்டுக்கு வந்திருந்தார்.

அவர் ஹன்சிகாவின் ஓவியத்தையும், அதன் நோக்கத்தையும் புரிந்துகொண்டு ஹன்சிகா வரைந்த ஓவியத்தை 15 லட்சம் ரூபாய்க்கு வாங்கி கொண்டார்.

தற்போது தன் பள்ளி தோழிகளுடன் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பயணத்தில் இருக்கும் ஹன்சிகாவுக்கு இம்மாதம் 9ந் தேதி பிறந்த நாள். வழக்கமாக ஒரு குழந்தையைத்தான் அவர் தத்தெடுப்பார். இந்த பிறந்த நாளுக்கு 5 குழந்தைகளை தத்தெடுக்க இருக்கிறார் என்றார்.

# சினிமா

## தனுஸ் பாடலை பாடிய இளையராஜா



சமீபகாலமாக தான் இசையமைக்கும் படங்களில்கூட முன்பு மாதிரி பின்னணி பாடுவ தில்லை இளையராஜா. அப்படிப்பட்ட அவரை சீனுராமசாமி இயக்கியுள்ள இடம் பொருள் ஏவல் படத்தில் பாட வைக்க ஒரு முயற்சி நடக்கிறது.

யுவன் இசையமைக்கும் அந்த படத்தில் வைரமுத்து எழுதிய பாடலை இளையராஜா பாடுவாரா? மாட்டாரா? என்பதற்கு இன்னும் பதில் கிடைக்கவில்லை.

இந்த நிலையில், தனுஷின் மனைவி ஐஸ்வர்யா இயக்கியுள்ள வை ராஜா வை படத்தில் யுவன் ஷங்கர் ராஜாவின் இசையில் ஒரு பாடலை பாடியிருக்கிறார் இளையராஜா. அந்த பாடலை எழுதியிருப்பவர் தனுஷ். ஏற்கனவே மனைவி இயக்கிய 3 படத்தில் ஒய் திஸ் கொலவெறி என்ற பாடலை எழுதி பாடி பாடகராகவும் பிரபலமானவர் தனுஷ்.

ஆனால். இப்போது தான் எழுதிய பாடலை இளையராஜா பாடியிருப்பது அவருக்கு மட்டற்ற மகிழ்ச்சியை கொடுத்திருக்கிறது. இதுவரை நான் எத்தனை பாடல்கள் எழுதி பாடியிருந்தாலும் அதெல்லாம் எனக்கு பெரிதில்லை. ஆனால் என் பாடலை இளையராஜா சார் பாடியிருப்பதுதான் எனக்கு பெருமை என்று தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறார் தனுஷ்.



## விஜய்யுடன் நடிப்பதை உறுதி செய்துள்ளார் சுருதி

தற்போது ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கதில் விஜய் நடித்து வரும் கத்தி படம் முடிந்தவுடன் சிம்புதேவன் இயக்கும் படத்தில் நடிக்கிறார் விஜய். சரித்திர கதையும், இன்றைய சமூக கதையும் இணைந்த பேண்டஸி படம். இதில் சரித்திர கால கதையில் விஜய்யுடன் மாஜி ஹீரோயின் ஸ்ரீதேவி நடிப்பது உறுதியானது. விஜய் ஜோடியாக தீபிகா படுகோனே, பிரியங்கா சோப்ரா, சோனாக்ஷி சின்ஹா இந்த மூவரில் ஒருவர் நடிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. தற்போது ஸ்ருதிஹாசன் நடிப்பது உறுதியாகி இருக்கிறது. ஸ்ருதி நடிப்பது பற்றி அவ்வப்போது செய்திகள் வெளிவந்தபோதும். அதனை தற்போதுதான் ஸ்ருதி தனது டுவிட்டரில் தெரிவித்திருக்கிறார். "சிம்புதேவன் இயக்கத்தில் விஜய் சாருடன் நடிக்க இருப்பதில் மகிழ்ச்சியாக இருக்கிறேன். சரித்திர கதையில் நடிக்கும் ஆசை இருந்தது. அதற்கான நேரம் இப்போது வந்திருக்கிறது" என்று கூறியிருக்கிறார். படத்தில் விஜய்க்கு இன்னொரு ஜோடியும் இருப்பது குறிப்பிடத்தக்கது.




# அமைதியின் சொற்கள்

# நான் யார்?

**அழியக்கூடியதும் அழிவற்றதும் ஒன்றாக இணைக்கப்பட்டதேமனிதன் என்பதாகும். முடிவில்லாத ஒன்று முடிவுள்ள பொருளினுள்ளே வைக்கப்பட்டுள்ளது.**

கடந்தகாலத்தையும் முடிந்துபோனதையும் நினைத்துப் பார்ப்பதிலேயே அதிகமாகநேரத்தை நாம் செலவிடுகின்றோம். நம் எதிர்காலம் எப்படி இருக்குமென்று சிந்தித்துப்பார்க்கின்றோம். நமக்கு நம் கனவுகளும் ஆசைகளும் எண்ணங்களும் உள்ளன. "நான் கடுமையாக உழைத்தால், நான் இதை அடையலாம், என்னால் அதையெல்லாம் செய்யமுடியும், வருங் காலத்தில், நான் மிகவும் மகிழ்ச்சியாகவும் நிம்மதியாகவும் இருப்பேன்," எனநாம் நம்புகிறோம்.




நான் வேறொரு பரிமாணத்தை வேறொரு காலத்தை பற்றி பேசுகின்றேன். இந்தகாலம் கடந்த காலத்திலோ எதிர்காலத்திலோ ல்ல, நான் குறிப்பிடும் காலம் இப்போது என்பதாகும். இந்தநொடிப்பொழுதில் மூச்சு உங்களுள் வந்துபோய்க் கொண்டிருக்கிறது. எல்லையற்ற ஆனந்தத் திற்கான சாத்தியம் இருப்பதை தெரிவிக்கிறது. இப்போதுதான் நீங்கள் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். அதனால் எல்லா விருப்பங்களும் ஆசைகளும் நிறைவேற்றப்படுகின்றன. கேள்வி என்னவென்றால்: "என்னுடையது" எனக் கூறும் அந்தநபர்தான் யார்? யார் அந்த "நான்" அதைப்புரிந்து கொள்ளும் பொழுதுதான் இந்தவாழ்வின் முழு அர்த்தத்தையும் நாம் புரிந்துகொள்ளத் தொடங்கும்.

ஆகவே, நான் யார்? நான் என்பதுவெறும் ரத்தமும் சதையும் தானா? நாம் எளிமையான பொருட்களைக் கொண்டு உருவாக்கப்படடவர்கள். மண்ணால் ஆன பொருளுக்கு வடிவமும் உருவமும் கொடுத்து இந்த உயிர் எனும் அற்புதம் அருளப்பட்டுள்ளது. அதன் காரணத்தினால் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். இதை நம்மால் மறுக்க முடியாது. பிறகு ஒருநாள் ஏதோவொன்று போய்விடும் இந்த உடல் மீண்டும் மண்ணாகிவிடுகிறது. அழியக்கூடியதும், அழிவற்றதும் ஒன்றுசேர்ந்துள்ளன. இந்த அழியக்கூடிய ஒன்று சுவாசிக்கிறது. சிந்திக்கிறது. பார்க்கிறது.அங்கு உயிர்த்துடிப்பும் உள்ளது. ஒருநாள் அந்த இருபொருட்களும் மீண்டும் பிரிந்து விடும். முடிவில்லாதது எங்கும் போகத் தேவையில்லை, அது எங்கும் வியாபித்துள்ளது. முடிவுள்ளபொருள் எங்கிருந்து வந்ததோ அங்கேயே திரும்பிச் சென்றுவிடும். அழியக்கூடிய இந்த ஒன்றினால் அழிவில்லா ஒன்றை அடைய முடியும்.

நான் இந்த எளிமையான உண்மையைப் பற்றிதான் உங்களிடம் கூற விரும்புகிறேன். இந்த உடல் இருக்கும் வரை அதனுள் ஏதோ ஒன்று இருக்கும் அது என்ன என்பதுதான் கேள்வி. ஏனென்றால் நாம் இந்த உடலின் வெளிப்புறத்தைப் பற்றிதான் அதிகமாக அக்கறை கொள்கிறோம். நாம் இந்த உடலை எப்படி பாதுகாப்பது, எவ்வாறு அலங்கரிப்பது என்பதை பற்றிதான் அதிகமாக கவகத்தைச் செலுத்துகிறோம். மேலும் சிலர் தங்கள் உடல் வலிமையின் மேல் நம்பிக்கையிருக்கின்றார்கள். இதில் தவறேதும் கிடையாது. ஒருநாள் வரும், இந்த உடல் அழிந்துவிடும். இது ஒரு கனவல்ல, அதுதான் அந்த ஒப்பந்தம் அது இயற்கை நியதிக்கு கட்டுப்பட்டது. நாம் பிறந்துவிட்டோம் பிறகு நிச்சியமாக ஒருநாள் நாம் போகத்தான் வேண்டும். இவ்விரண்டுக்கும் இடைப்பட்டதுதான் நம்முடைய வாழ்க்கை. ஆகையால் நாம் என்பது என்ன? நாம் யார்?

**அந்த உண்மையைக் கண்டு கொள் நீங்கள் உள்ளே தேட வேண்டும். வெளியே அல்ல.**

**-பிறேம் ராவத்**

எஸ்.சிவானந்தராசா
கிருலப்பனை,
கொழும்பு-06.

web: www.wopg.org
Tel : 011 2512885

# முயன்றால் முடியும்! 18

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | 3 | | ■ | 4 |
| | ■ | | ■ | | 5 | 6 | |
| 7 | | 8 | ■ | | | | |
| | 9 | | ■ | | | 10 | |
| | | | 11 | | | | |
| | | | | | ■ | | ■ |
| 12 | | 13 | | 14 | | | |
| ■ | ■ | | | | 15 | | |

**மேலிருந்து கீழ்**

1. பெண்களை இதற்கும் ஒப்பிடுவார்கள்.
2. வயதான மூதாட்டி
3. 1956ல் சிவாஜிகணேசன் பானுமதி நடித்து வெளியான திரைப்படம்
4. காய்க்கும் பூக்கும் கலகக்கும் காகம் இருக்க கொப்பில்லை.
5. இது தின்னக்கூலி வேண்டுமா என்பார்கள்
6. உழவர் திருநாள்.
8. அரசபை நகைச்சுவையாளர்
9. புதுமைப் பெண் படைத்த புரட்சிக் கவி.
11. இராவணன் சீதையைக் கடத்திச் சென்ற இடம்.
13. பாண்டவர்களில் அருச்சுணன் சிறந்த............... வித்தைக்காரன்

**இடமிருந்து வலம்**

1. காட்டு யானைகளை அடக்கப் பயன்படுத்தப்படும் பயிற்றுவிக்கப்பட்ட யானைகள்.............
2. சந்திரன் பூமியின் துணை.................
5. திரைப்படத்திற்காக எழுதுவது திரைக்..........................
7. முற்றிலும் துறந்தவர்
10. ...................... சுமக்கும் கழுதைகள் என்பார்கள்.
12. அம்மியில் அரைக்கப் பயன்படுத்தப்படுவது.
14. கடிதம்
15. யேசுவை இதில் அறைந்தார்கள்.

விடைகளை மேலுள்ள கூப்பனில் எழுதி, கத்தரித்து எங்களுக்கு அனுப்பிவையுங்கள். முற்றிலும் சரியான விடைகளை எழுதுபவர்களில், குலுக்கல் மூலம் தெரிவாகும் முதல் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 500/-, 300/-, 200/- வழங்கப்படும்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ஒ | 2 ற் | ற | 3 ன் | ■ | 4 தி | ரி | ஷ 5 |
| ■ | று | ■ | 6 | 7 அ | பா | ■ | ஜ |
| 8 அ | பு | 9 ப் | ■ | தி | ■ | 10 ஆ | கா |
| ம் | ■ | 11 அ | 12 வை | று | 13 சு | ■ | ன் |
| 14 ம | ன் | பா | ர | ■ | கா 15 | லி | ■ |
| ன் | ■ | வி | ■ | உ 16 | ரை | ■ | 17 ம |
| ■ | 18 ஏ | ■ | 19 டை | ■ | 20 க் | அ | கி |
| 21 ந | ர் | ■ | 22 வா | மை | ய் | ■ | மை |

சென்ற மாதத்திற்கான சரியான பதிலை எழுதியவர்களில் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்ட 3 அதிஷ்டசாலிகள் பணப்பரிசை பெறுகின்றார்கள்

**500/-** கமலி– 2ம் குறுக்குத்தெரு, வவுனியா.

**300/-** ஜயந்தன்–பாரதிபுரம், வவுனியா

**200/-** உ.மனிஷா –தவசிகுளம், வவுனியா.

**முற்றிலும் சரியான விடைகளை அனுப்பியவர்களின் பாராட்டுப்பெறும் 5 அதிர்ஷ்டசாலிகள்**

விமல் – வவுனியா

டினோஜா – காரைநகர்

சி.எட்வின் – திருகோணமலை

திரு.பீற்றர் ஜொன்லின் – கொழும்பு – II

க.கம்ஷா – வவுனியா


"மாதநிலா" சஞ்சிகையில்
க.பொ.த.சாதாரண தர பரீட்சையில்
6 பாடச் சித்தியுடன்

**வேலைவாய்ப்பு**

யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, ஆகிய மாவட்டங்களிலிருந்தும் விற்பனைப் பிரதிநிதிகள் எதிர்பார்க்கப்படுகின்றனர்

**சம்பளம் 20,000/- மேல்**

தொடர்புகளுக்கு:
**077 9009491**

# என் உயிர்ப் பாடல்

| | | |
|---|---|---|
| படம் | : | பூப்பறிக்க வருகிறோம் (1999) |
| இசை | : | வித்தியாசாகர் |
| பாடலாசிரியர் | : | வாசன் |
| பாடியவர் | : | ஸ்ரீநிவாஸ், ஸ்ரீவர்த்தினி |




எட்டில் அழகு பதினெட்டில் அழகு
எந்த பெண்ணும் இருபதில் ரெட்டை அழகு
பெண்ணின் அழகே உச்ச அழகு
பூமியில உள்ளதெல்லாம் மிச்ச அழகு
ஆடை அழகு பாதி அழகு
அந்த சொல்லை மாற்றியது பெண்ணின் அழகு
பெண்ணை கொண்டு கூடியது மண்ணின் அழகு

உதட்டை மூடி சிரிப்பதழகு
உதிரிப்பூக்கள் தொடுப்பதழகு
மணநாள் குறித்ததும் தேதி தாள்களை திருப்பி பார்ப்பது ஓர் அழகு
வானொலியோடு பாடும் அழகு
பாடிக்கொண்டே சமைப்பதழகு
தாமரை இலையில் நீர் அழகு
அட தாவணி பெண் போல் யார் அழகு

பின்னல் ஜடையை பிரிப்பதழகு
தன்னை தானே ரசிப்பதழகு
நல்ல ஆணின் அழகினை ரசிக்கும் பெண்களின் ஓர பார்வைகள் ஓர் அழகு
காதல் பெண்ணின் மிரட்டல் அழகு
ஹய்யோ ஹய்யோ அலட்டல் அழகு
ஒவ்வோர் பெண்ணும் ஓர் அழகு
அந்த ஒன்றுக்குள்ளே நூறழகு

பெண்களை சிறுபராயத்திலிருந்து பருவமடைந்த பராயம் வரை வர்ணித்துப் பாடியுள்ளதால் இப்பாடல் எனக்கு மிகவும் பிடித்துள்ளது.

**பி.சோபனா**

# உங்கள் ராசிக்கு காதல் உறவுகள் எவ்வகையில் அமையும்

## மகரம்

இவர்களுக்கு காதல் என்பது முக்கியத்துவம் வாய்ந்தது. உண்ணாமல் உறங்காமல் கூட இருப்பார்கள். ஆனால் காதல் இல்லாமல் இருக்க மாட்டார்கள். மகர ராசிக்காரர் காதலியாக இருந்தால் அவரது அன்பு குறைவுதான். அதே சமயம் காதலராக இருந்தால் அவரது காதலுக்கு அதிக வலிமை உண்டு. யாரையும் நம்பிவிடுவர். தனுசு ராசிக்காரர்களுக்கு கண்டிப்பாக காதல் அனுபவம் இருக்கும். மகர ராசிக்காரர்களின் காதல் ஆத்மார்த்தமாக இருக்கும். இவர்களது காதல் எந்த வகையிலும் தவறாக இருக்காது.



# Face Book ல்
## சிங்கத்திடம் சிக்கியது மான்.

மாதம் சுமந்து பெற்றதும் ஒரு பெண்தான். புரிந்துகொள். உன் அம்மாவைப் போலத்தான் எல்லாப் பெண்களும். பெண்கள் கண்ணீர் விட நீ சந்தோசப்படுகின்றாய். ஒரு நேரம் நீ கண்ணீர் விடும் போது உன் கண்ணீர் துடைக்க உன் கையும் இருக்காது. ஏதோ நல்லா இரு. எங்களைப்போல அந்தப்பெண்ணையும் ஏமாற்றிராதே. (என்று கூறி அவனிடம் இருந்து மொத்தமாக விலகிச் சென்றாள் கவி.)

இவள் விலகினாளே தவிர இவளது Face Book அவனது கையில் பட்டு சீரழிந்து கொண்டிருந்தது. ஒன்றரை வருடங்களுக்குப் பிறகு ஒரு உறவினர் மூலம் அந்த முகஅட்டைய முற்றாக அழித்தாள். இப்போது தான் கவியால் ஒழுங்காக எந்த வேலையையும் செய்ய முடிகின்றது.

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே உண்மையான அன்பு என பொய்யாக காம இச்சைக்காக நடிக்கும் கயவர்கள் அதிகம். Face Book பாவிப்பவர்கள் உங்கள் புகைப்படங்களை அவற்றில் பதிவிறக்கம் செய்யாதீர்கள். மற்றும் கடவுச் சொல்லை யாருக்கும் தெரியாத முறையில் அமைத்துக் கொள்ளுங்கள்.

**செல்வநாயகம் கஜந்தினி**
சாஸ்திரிகூழாங்குளம், வவுனியா.

எம் நாட்டிற்கு சமாதானம் கிடைத்து விட்டதாக கூறுகின்றார்கள். கூறுவது மட்டுமா பெரிதாக கொண்டாடுகிறார்கள். எப்போது ஒரு பெண்ணால் தனியாக யார் துணையுமின்றி செல்ல முடிகின்றதோ அன்றுதான் நாட்டுக்கும் பெண்களுக்கும் சுதந்திரம்.

ஆண்களே பெண்களை காமத்துடன் பார்க்காதீர்கள். கண்களாக பாருங்கள். இக்கதை ஒரு உண்மைச்சம்பவம் ஆகும். பெயர்கள் மட்டும் மாற்றப்பட்டுள்ளது.

(முற்றும்)

**போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டி இதுவரைக்கும் பரிசில்களைப் பெறாத போட்டியாளர்கள் எமது அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தங்களுடைய பரிசில்களை பெற்றுக்கொள்ளலாம்**




வடிவேல்: நீதான் BILGATES A?
Bilgates: yes, what do u want?
வடிவேல்: என்ன computer company வச்சி நடத்துரயமே?
Bilgates: yes, thats true...
வடிவேல்: அடைய் மக்கு.... my computer ல my picture ன்னு இருக்கு... open பண்ணினால் என் photo ஒன்னு கூட இல்ல...
windows ன்னு இருக்கு open பண்ணினால் காத்துகூட வரமாட்டிங்குது... அதெல்லாம் விடு.....
ரொம்ப முக்கியமா my document ன்னு இருக்கு ஆனா அதுல என் வீட்டு பத்திரம் ஒன்னு கூட இல்ல...
என்னயா company நடத்துற பிச்சி புடுவேன் பிச்சி...
Bilgates: ????????????????

## பொது மக்களுக்கான அறிவித்தல்



மேலே உள்ள புகைப்படத்தில் காணப்படுபவரும் தே.அ.அ.இல 676340025 V ஐக் கொண்டவரும், இல: 130/8, குட்செட்வீதி, தோணிக்கல், வவுனியா எனும் முகவரியில் வசிப்பவருமாகிய **திருமதி.சிவராணி** என்பவர் தற்போது எமது நிறுவனத்தில் சேவையில் இல்லை என்பதையும் அவருடன் ஏற்படுத்திக் கொள்ளும் எந்த கொடுக்கல் வாங்கல்களுக்கோ / பேச்சுவார்த்தைகளுக்கோ எந்த நபருக்கும் / விளம்பரதாரர்களுக்கும் நாங்கள் எந்தவிதத்திலும் பொறுப்பாளர்கள் அல்ல என்பதை இத்தாலின் மூலம் அறியத்தருகின்றோம்.

**ஆசிரியர்**
**மாதநிலா**

# மாணவர் அரங்கம்


சலோமி
மாணவர் இல: 02


சிபியா
மாணவர் இல: 03


சே.பானுயன்
மாணவர் இல: 04


ற.அபிதா
மாணவர் இல: 05


ற.அனோஜினி
மாணவர் இல: 06


கீ.கலையரசி
மாணவர் இல: 07


க.கயலரசி
மாணவர் இல: 08


ஜீ.சான்சியா
மாணவர் இல: 09


ந.டேனுஜன்
மாணவர் இல: 10


உ.கனிமாறன்
மாணவர் இல: 11


உ.கனிநிலவன்
மாணவர் இல: 12


மா.கயலக்ஸி
மாணவர் இல: 13


ந.சாலினி
மாணவர் இல: 14


சி.டனுஸ்கரன்
மாணவர் இல: 15


ர.நிரோஜினி
மாணவர் இல: 16


ச.பிரதீபன்
மாணவர் இல: 17


வீ.சஜானா
மாணவர் இல: 18


ஞா.துஷ்யந்தன்
மாணவர் இல: 19


ந.தனுசன்
மாணவர் இல: 20


க.கஜீவா
மாணவர் இல: 21


ம.விதுசா
மாணவர் இல: 22


ந.நவயதுர்சன்
மாணவர் இல:23


த.பிரியங்கா
மாணவர் இல: 24


ச.மேரிபிரிசதர்சினி
மாணவர் இல:25


த.தனுஸ்ரன்
மாணவர் இல: 26


ச.சஞ்சை
மாணவர் இல: 27


ம.மதுமிதா
மாணவர் இல: 28


ற.ஜஸ்மி
மாணவர் இல: 29


ஜெ.கலைப்பிரியா
மாணவர் இல: 30


சு.டிஷாயினி
மாணவர் இல: 31

# அனைவருக்கும் ஆங்கிலம் 14

இன்றைய பாடத்திற்குச் செல்வோம்.

5. I will do a job
நான் ஒரு வேலை செய்வேன்
நான் ஒரு வேலை' செய்கிறேன் (சற்றுப் பிறகு)

6. I won't do a job. (will + not)
நான் ஒரு வேலை செய்ய மாட்டேன்

மேலுள்ள 5, 6 வரிகளைப் பாருங்கள். இவை சாதாரன எதிர்கால வாக்கியங்களாகும். இவற்றை ஆங்கிலத்தில் "Simple Future Tense" என்று கூறுவர். இந்த Form ல் தன்னிலை, முன்னிலை, படர்க்கை மற்றும் ஒருமை, பன்மை எல்லாவற்றிற்கும் "will" என்றே பயன்படுத்தப்படுகிறது.

Positive (Affirmative)
Subject + Auxiliary verb + Main verb
I /You /He /She /It / We / You /They + will + do a job.
இவற்றில் "Subject" வாக்கியத்தின் முன்னால் உள்ளது.

Negative
Subject + Auxiliary verb + not + Main verb
I /You /He /She /It /You /We /They + won't + do a job

Question (Interrogative)
Auxiliary verb + Subject + Main verb
Will + I /you /he /she /it /you /we /they + do a job?
இவற்றில் "Subject" அதாவது விடயம் பின்னாலும் "Auxiliary verb" துணை வினை வாக்கியத்தின் ஆரம்பித்திலுமாக மாறி வந்துள்ளதை அவதானியுங்கள்.

இவற்றை சரியாக விளங்கிக் கொண்டோமானால் நாமாகவே மிக எளிதாக கேள்வி பதில்களை மாற்றி அமைத்துக் கொள்ளலாம் என்பது உங்களுக்கே புரியும். தொடரும் உதாரணங்களைப் பாருங்கள்.

**சத்தியமா**

**வியந்துதான் போவீங்க!**

**ஆப்பிள், உருளைக் கிழங்கு, வெங்காயம் இவை மூன்றையும் உங்கள் மூக்கைப் பிடித்துக் கொண்டு சாப்பிட்டால் மூன்றும் ஒரே சுவையுடையதாகவே இருக்கும். அதாவது இனிப்புச் சுவை.**

Will you do a job?
நீ ஒரு வேலை செய்வாயா?
Yes I will do a job
ஆம், நான் ஒரு வேலை செய்வேன்.
No I won't do a job. (will + not)
இல்லை, நான் ஒரு வேலை செய்யமாட்டேன் .

Will you speak in English?
நீ ஆங்கிலத்தில் பேசுவாயா?
Yes I will speak in English.
ஆம், நான் ஆங்கிலத்தில் பேசுவேன்
No I won't speak in English. (will + not)
இல்லை, நான் ஆங்கிலத்தில் பேசமாட்டேன்

Will you go to school?
நீ பாடசாலைக்கு போவாயா?
Yes I will go to school.
ஆம், நான் பாடசாலைக்கு போவேன் .
No I won't go to school. (will + not)
இல்லை, நான் பாடசாலைக்கு போகமாட்டேன்

இப்போது மேலே கொடுக்கப்பட்டிருக்கும் உதாரணங்களைப் பின்பற்றி கீழே இருக்கும் வாக்கியங்களை நீங்களாகவே கேள்வி பதிலாக மாற்றிப் பயிற்சி செய்யுங்கள் பார்க்கலாம்.

நீங்கள் எழுதிப் பயிற்சி செய்யும் போது அவற்றை வாசித்து வாசித்து எழுதவும். அவ்வாறு வாசித்து வாசித்து எழுதும் பொழுது அவை தானாகவே உங்கள் மனதில் பதிந்து, உங்களின் வாசிக்கும் ஆற்றலையும், ஆங்கில அறிவையும் அதிவேகமாக வளர்த்துக்கொள்ள உதவும். அதேவேளை எழுத்தாற்றலையும் எளிதாக பெற்றுவிடலாம்.

சரி பயிற்சியைத் தொடருங்கள்.

1. I will open the door.
நான் கதவை திறப்பேன்


2. I will apply for vacancies.
நான் தொழில்களுக்காக விண்ணப்பிப்பேன்

3. I will speak in English fluently.
நான் ஆங்கிலத்தில் வாக்கு வன்மையாக பேசுவேன் (தடங்களின்றி)

4. I will ask for an increment.
நான் ஓர் (பதவி/சம்பளம்) உயர்வு கேட்பேன் .

## கை வண்ணங்கள்

மாதநிலா செல்வங்களே, நீங்கள் வரைந்த ஓவியங்களை எங்களுக்கு அனுப்பி வையுங்கள். தொடர்ந்து வரும் இதழ்களில் "உங்கள் கைவண்ணங்கள்" பகுதியில் பிரசுரிக்கப்படும்.



**சு.டிஷாயினி**
தரம்:3, வ/மருதோடை அ.த.க.பா
ஓமந்தை.

**Job Bank**

வேலைவாய்ப்பு தருனர்களாக இருந்தாலும் சரி வேலைவாய்ப்பை பெறுபவர்களாக இருந்தாலும் சரி எங்களுடன் இணைந்து உங்கள் தேவைகளை நிவர்த்தி செய்வது தான் இந்த JOB BANK இன் சேவை.

### வேலைவாய்ப்பு

- முல்லைத்தீவு பிரதான வீதியில் அமைந்துள்ள பிரபல புகைப்படக்கலையகத்திற்கு டிசைனிங் செய்வதற்கு தகுதி வாய்ந்த ஆண்,பெண் இருபாலாரும் தேவைப்படுகின்றார்கள்.
0212290025 / 0775298352

**உடன் தொடர்பு கொண்டு எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்**


**எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது!**

**வியாபார நிறுவன உரிமையாளர்களே! உங்களுடைய தொழிலுக்குத் பொருத்தமான பணியாளர்களை எதிர்பார்த்துக்கொண்டு இருக்கின்றீர்களா? மாணவ மாணவியர்களே! படித்துவிட்டு உங்களுக்கு விருப்பமான வேலை ஒன்றை கற்றுக்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளீர்களா?**

அழையுங்கள் **077 900 94 91**

# ஒரே ஒரு SMS வெல்லுங்கள்
## 500 ரூபாய் ரீலோட் பணப்பரிசு

**ஜுலை மாதம் மறைந்திருந்தவர் "மஞ்சாப்பை" திரைப்படத்தின் கதாநாயகன் விமல்**



ஜுலை மாத போட்டிக்காக அதிகமான SMS கள் எமக்கு கிடைத்திருந்தன. அவற்றுள் சரியான பதிலை அதிகமானவர்கள் அனுப்பியிருந்தார்கள். அவற்றுள் குலுக்கள் முறையில் தெரிவு செய்து 500 ரூபா ரீலோட்டை பெற்ற வெற்றியாளர்.


**எஸ்.கல்பனா**
**இல:2, உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி**


**நீங்கள் செய்யவேண்டியது, அடையில் மறைந்திருப்பவர் யார்?**

**மறைந்திருப்பவர் பெயர்**
**[இடைவெளி]**
**உங்களுடைய பெயர், முகவரி**
**என்பவற்றை Type செய்து**
**077 9903723**
**என்ற**
**எண்ணுக்கு**
**SMS செய்யுங்கள்**

**குறித்த மாதம் முழுவதும் SMS அனுப்பலாம், ஒருவர் ஒரு SMS மாத்திரமே அனுப்பமுடியும், மாதஇறுதியில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் ஒருவருக்கு 500 ரூபாய் பெறுமதியான ரீலோட் பரிசு வழங்கப்படும்**


பாலுவின் ஆசை!
ஒருநாள் காட்டில், பாலு என்ற குரங்கு மரத்தில் தொங்கியபடி விளையாடி கொண்டிருந்தது!
அந்த யானை என்ன செய்து கொண்டிருக் கிறது!
ஜிண்டன் என்ற யானை, ஒரு மரத்தை வேரோடு சாய்ப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தது!
ஹி ஹி
ஹூம்! இதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது!
உன்னால் அந்த மரத்தை வேரோடு சாய்க்க முடியுமா என்று பார்த்து கொண்டிருக் கிறேன்!
ம்... பொறுத்திருந்து பார்!
சரி... பார்க்கிறேன்!
ம்... க்ரேட்!
என் தலை பலமாக இருப்பதால் தான் என்னால் இதை செய்ய முடிந்தது!


எனக்கும் யானை போன்ற தலை இருந்தால், என்னாலும் எதை வேண்டு மானாலும் மோதி சாய்த்து விட முடியும்!
அடுத்த நாள், குரங்கு தவம் செய்ய தொடங்கியது!
மரத்தில் தலைகீழாக தொங்கி கடும் தவம் புரிந்து கொண்டிருந்தது!
விரைவில்-
பாலு, உன்னுடைய தவத்தை மெச்சி நான் வந்திருக்கிறேன். உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்!
எனக்கு யானை போன்ற தலை வேண்டும்!
© JINGLEBELL CREATIONS
பாலு, நீயோ குரங்கு. உனக்கு கண்டிப்பாக யானை தலை வேண்டுமா?
எனக்கு யானை தலைதான் வேணும்!
நன்கு யோசித்துப் பார்!


ஏய்! அது என்ன விலங்கு. யானையா? குரங்கா?
நான்தான் பாலு!
இங்கிருந்து போ, நீ பொய் சொல்கிறாய்!
இதுபோன்ற உயிரினத்தால் நம் காட்டிற்கு துன்பம் தான் ஏற்படும்! இதை இங்கிருந்து விரட்டியடிக்க வேண்டும்!
ஆ... இல்லை... என்னை அடிக்காதீர்கள்!
உன்னால் யானை கூட்டத்திற்கே அசிங்கம்!
ஆ!
பாவம் பாலு. காட்டை விட்டு வெகுதூரம் சென்றுவிட்டது. திரும்பி வரவே இல்லை!
-முற்று

# கணினி மயம் 8

-தேடுதலுக்கான விடை


## டிவைஸ் மேனேஜர் ஒரு சிறிய விளக்கம்

கணினியில் உள்ள அனைத்து ஹார்ட்வேர் சாதனங்கள் குறித்தும் தகவல்களைக் கொண்டுள்ள இடம் தான் டிவைஸ் மேனேஜர். மவுஸ், கீ போர்டு, மொடம், மொனிட்டர், சவுண்ட் கார்ட் என அனைத்து ஹார்ட்வேர்களும் எப்படி ஒவ்வொன்றுடனும் இணைக்கப்படுகின்றன என்று இதில் தெரியவரும். அத்துடன் ஒவ்வொரு ஹார்ட்வேர் சாதனமும் எப்படி இயங்க வேண்டும் என்பதனையும் இதன் மூலம் சென்று கான்பிகர் செய்திடலாம். இதன் மூலம் டிரைவர்களை அப்டேட் செய்திடலாம் ஹார்ட்வேர் செட்டிங்குகளை மாற்றிடலாம் பிரச்னைகளை எளிதாக தீர்த்துவிடலாம். ஏதாவது ஒரு ஹார்ட்வேர் சாதனத்தில் பிரச்னை இருப்பதாகத் தெரிந்தால் டிவைஸ் மேனேஜர் சென்று அந்த குறிப்பிட்ட சாதனம் எப்படி கான்பிகர் செய்யப்பட்டிருக்கிறது என்று பார்த்து பிரச்னைகளைத் தீர்க்கலாம். தற்காலிகமாக அவற்றை நீக்கி மீண்டும் இன்ஸ்டால் செய்திடலாம். ஆனால் இவை எல்லாம் நன்றாகத் தெரிந்த பின்னரே இவற்றில் கை வைக்க வேண்டும். என்ன என்று தெரிந்து கொள்வதில் தவறில்லை. டிவைஸ் மேனேஜரைக் காண My Computer ஐகானை ரைட் கிளிக் செய்து Properties தேர்ந்தெடுக்கவும். அதில் உள்ள டேப்களில் Hardware என்ற டேபைக் கிளிக் செய்தால் கிடைக்கும் விண்டோவில் Device Manager என்ற பட்டனைக் கிளிக் செய்து டிவைஸ் மேனேஜரைப் பெறலாம். இங்கு கம்ப்யூட்டரில் உள்ள அனைத்து ஹார்ட்வேர் சாதனங்களும் இடம் பெற்றிருக்கும். ஏதாவது ஒரு சாதனத்தின் இயக்கநிலையை அறிய வேண்டும் என்றால் பட்டியலில் அதனைப் பார்த்து அதன் மீது இருமுறை கிளிக் செய்திடவும். அந்த சாதனத்துடன் தொடர்புடையவை தெரியவரும். அதில் ஏதாவது ஒன்றில் ரைட் கிளிக் செய்து கிடைக்கும் மெனுவில் Properties தேர்ந்தெடுக்கவும். இப்போது கிடைக்கும் டேப்களில் General என்ற டேபைக் கிளிக் செய்தால் பாக்ஸ் கிடைக்கும். இங்கு அந்த சாதனம் சரியாகச் செயலாற்றுகிறதா என்ற தகவல் கிடைக்கும். உங்களைப் பொறுத்தவரை அதில் பிரச்னை இருப்பதாகத் தெரிந்தால் Troubleshoot பட்டனை அழுத்தி பிரச்னையைச் சரி செய்வதில் முனையலாம்.

## பெயர் சூட்டலாமா? உங்கள் கணனிக்கு

உங்கள் கம்ப்யூட்டர் உங்கள் பெயரில் இருக்க வேண்டும். அல்லது உங்கள் குடும்பத்தில் உங்களுக்குப் பிடித்தவர் யார் பெயரிலாவது இருக்க வேண்டும். எனவே எப்படியும் ஒரு பெயரில் கம்ப்யூட்டர் இயங்கும். இதனை எப்படித் தெரிந்து கொள்வது? ஒரு வேளை உங்களுக்கு இப்போதுதான் திருமணமாகி உங்கள் கம்ப்யூட்டருக்கு உங்கள் மனைவியின் பெயரை வைத்துக் கொள்ள ஆசைப்படுகிறீர்கள். எங்கு சென்று மாற்றுவது? என்ற கேள்விக்கு விடை பார்ப்போமா?

மானிட்டர் திரையில் ஆல Computer என்று ஒரு ஐகான் இருக்கிறதல்லவா? அதன் மீது ரைட் கிளிக் செய்திடுங்கள். கிடைக்கும் மெனுவில் Properties என்னும் பிரிவைத் தேர்ந்தெடுத்தால் பல டேப்கள் கொண்ட விண்டோ ஒன்று கிடைக்கும். இதில் Computer Name என்ற டேபின் மீது கிளிக் செய்து கிடைக்கும் விண்டோவைக் கவனியுங்கள். இந்த திரையில் Computer Description என்று ஒரு இடம் தெரியும். இதன் நேர் எதிரில் உள்ள கட்டத்தில் இந்த கம்ப்யூட்டர் குறித்த ஒரு சிறு விளக்கம் இருக்கும். இல்லை என்றால் நீங்கள் அமைக்கலாம். இதில் மை ஆபீஸ் கம்ப்யூட்டர் அல்லது மை கிச்சன் கம்ப்யூட்டர் என்று உங்களுக்குப் பிடித்த கம்ப்யூட்டர் குறித்த விளக்கத்தினைத் தரலாம். ஆனால் இது கம்ப்யூட்டரின் பெயர் ஆகாது. இதன் கீழாகக் Full Computer Name என்று இருக்கும். இதில் மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டும் என்றால் அருகில் உள்ள Change என்பதில் கிளிக் செய்து பின் கிடைக்கும் விண்டோவில் உள்ள கட்டத்தில் பெயரை டைப் செய்து ஓகே கிளிக் செய்திட கம்ப்யூட்டரின் பெயர் நீங்கள் டைப் செய்ததற்கேற்றபடி மாற்றப்பட்டு காட்டப்படும்.



# அரச கருமமொழிகள் அமுலாக்கும் செயலணியின் செயற்பாடுகள்

வவுனியா மாவட்டத்தில் பொது விடயங்கள் பலவற்றில் பேசும் செயற்படும் ஒரு சிலரின் ஒன்று கூடிய செயற்பாட்டின் மூலம் அரசியல் யாப்பில் அத்தியாயம் 4 இல் பகுதி 18 தொடக்கம் 25 வரையிலான விடயங்களைக் கருத்திற் கொண்டும் அரசியல் யாப்பில் கூறப்பட்ட ஒன்று சேர்வதற்கான அடிப்படை உரிமையை ஆதாரமாகக் கொண்டு 15.01.2009 ஆண்டு முதலாவது ஒன்று கூடல் கூட்டம் 12 பேர் சமூகத்துடன் ஆரம்பமாகியது.

அதே 12 பேரின் ஒத்துழைப்பின் மத்தியில் இன்றுவரை செயற்பட்டு வரும் ஒரு சுயமான அமைப்பு என்பதுடன் இலங்கையிலேயே சுயமாக ஆரம்பிக்கப்பட்ட முதலாவது அமைப்பு "எங்களால் முடியும்" என்ற எண்ணக்கருவை மையமாக வைத்து தொடர்ந்து அரச கருமமொழிகள் எங்கு அமுலாக்கம் பெறாமல் அல்லது பெறமுடியாமல் இருக்கிறதோ அதனை உரிய இடங்களுக்குடச் சுட்டிக்டகாட்டி செயற்படவைத்து சிறப்பாக பல பணிகளை ஆற்றி வெற்றி கண்டுள்ளதுடன் அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் பாராட்டுக்களையும் பெற்றுள்ளது. எமது செயலணியின் யாப்பினையும் செயற்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு இன்று தேசிய மொழிகள் நல்லினக்க அமைச்சு செயலகத்தால் நாடு தழுவிய வகையில் மொழி செயற்பாட்டு சங்கங்கள் அமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றதென்றால் அதற்கு முன்னோடியாக சுயமாக சிந்தித்து நாம் பலர் ஒன்று கூடி எடுத்த தீர்மானங்களும் செயற்பாடுகளும் காரணமாகும் இன்று நான்கு வருட செயற்பாட்டிற்குப்பின்னால் ஆக்கப்பட்ட மொழிச் சங்க செயலணியிலே எமது செயலணியின் பெயரே மிக முக்கியமானதாக இருப்பதுடன் சிறப்படைந்துள்ளதுடன் பதிவு செய்யப்பட்டுள்ளது. தேசிய மொழிகள் சமூக நல்லிணக்க அமைச்சின் கீழ் பதிவு இல L/S//V/16/12 - 16/12/2012 திகதியிலாகும்

வவுனியா மாவட்டத்திலே பல சங்க அமைப்புக்கள் பதிவாகியுள்ளன கிட்டத்தட்ட 25க்கும் மேற்பட்ட சங்க அமைப்புச் செயலணிகள் அமைச்சின் கீழ் பதியப்பட்டு தமிழ்மொழி, சிங்களமொழி கல்விச் செயற்பாடுகளைச் செய்து வருகின்றது.

எமது செயலணியும் பொதுக் கொள்கைகளின் அடிப்படையில் மொழிவகுப்புக்களை நடத்த வேண்டும் என்றதனை அடிப்படையாகக் கொண்ட போதும் நாம் மொழி அமுலாக்கமின்மையால் ஏற்படும் பிரச்சினைகளையும் அதனை அமுலாக்கம் செய்வதற்குரிய நடவடிக்கைகளிலேயே கூடுதலாக அக்கறை செலுத்தி செயற்பட்டு வருகிறோம்.

மேலதிக செயற்பாடாக வவுனியா மாவட்டத்திலிருந்து கொழும்பு பேராதனை மற்றும் தென்பகுதி பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகியுள்ள மாணவர்களுக்கான சிங்கள மொழி வகுப்பினை வவுனியா மாவட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் அபிவிருத்திச் சங்கத்திற்கு அனுசரணையுடன் இலவசமாக செய்து கொடுத்துள்ளோம். எமது "அரச கருமமொழிகள் அமுலாக்கும் செயலணி" எவ்வித நிதியையும் யாரிடமும் சேர்க்காமல் இதுவரை 04 வருடங்கள் நாம் வெற்றிகரமாக இயங்கியுள்ளோம் என்றால் அதன் பெருமைகள் அதனது ஆரம்ப பொதுச்சபை உறுப்பினர்களாகவும் தற்போது வரை எம்முடன் நின்று செயற்பட்டு வரும் 12 உறுப்பினர்களையே சாரும். மேலும் பொதுச்செயலாளர் வீட்டிலேயே சொந்த அலுவலகமாக இயங்கி தற்போது புதிய சிந்தனையுடன் மேலும் எமது சேவைகளை "மக்களால் மக்களுக்காக" என்ற எமது அமைப்பின் தாரக மந்திரத்துடனும் அரச கருமமொழிகள் அமுலாக்குதலை நாம் அர்த்தமுள்ளதாக்கிடுவோம் மொழிகளின் மூலம் புரிந்து கொள்வோம் என்ற நற்சிந்தனையுடனும் பதிவு செய்யப்பட்டுள்ள செயலணியாக மிளிர்கின்ற காரணத்தால் புதிய அலவலகமொன்றை மக்கள் மத்தியில் இல.98யு, மில் வீதியில் (வவுனியா) பொதுச்சேவையில் ஈடுபட்டுவருவதும் குறிப்பிடத்தக்கது. எமது வங்கி கணக்கு தேசிய சேமிப்புகு வங்கி: இல. 100880212610 ஆகும். மக்களால் மக்களுக்காக என்ற எமது அமைப்பின் தாரக மந்திரத்துடனும் மொழிகளின் மூலம் புரிந்துகொள்வோம் என்ற நற்சிந்தனையுடன் "அரச கருமமொழிகள் அமுலாக்குதலை நாம் அர்த்தமுள்ளதாக்குவோம்." அதன் மூலம் இருமொழிகளூடாக ஒரு தேசத்தை கட்டியெழுப்ப முயற்சி செய்திடுவோம் என்ற இலக்குடன் அதற்கான பல வழி முறைகளில் ஈடுபட்டுவருகின்றோம். எனவே ஆர்வமுள்ள புத்திஜீவிகள், சிவில் சமூகத்தினர் எமது செயலணியுடன் தொடர்பு கொண்டு எமது செயற்பாடுகள்/தேவைகள் பற்றி அறிந்து கொள்ள முடியும். உங்களது ஒத்துழைப்புக்களும் பங்களிப்புக்களும் எமது செயற்பாட்டிற்கு மிக அவசியமானதென கருதுகிறோம்.

தொடர்புகளுக்கு: **மோ.இராஜ்மோகன்**
-பொதுச்செயலாளர்
077 6059630

# கவிதை மழை

கவிதைக்கு களம் அமைத்து தரும்
கவிதை மழையில் உங்கள் கவிதையும்
நனைந்திடலாம் வழமையான
உங்கள் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்

## நினைவுகள்

இரும்பு போல் உள்ள கருங்கல்லுக்குள்
மறைமுகமாய் ஒழிந்து கிடக்கிறது – சிற்பம்
இதுபோலவே என் மனதின் உயர்ந்த
சுவர்களுக்கிடையில் – மறைமுகமாய்
உயிரற்று ஒய்ந்து கிடக்கிறது
உன் நினைவுகள்
அன்று உன் கண்களுடன்
நான் பேசிய மௌனங்கள்
அசைவுகளாகி இன்று
வார்த்தைகளுடன் கைகோர்க்கின்றன
இதோ!
உன் அன்புப் புத்தகத்தில்
ஏடுகளின் பக்கங்கள்
ஒவ்வொன்றிலும்....
கவிவரியாய் நகர்கின்றன
உன் நினைவுகள்

பிரியதர்சினி பிரகாசம்
பாரதிபுரம், வவுனியா.



## என் உயிரே

அணைப்பதற்கு
கைகள்
அழுவதற்கு
கண்கள்
சாய்ந்து கொள்ள
உன்தோள்
அதுவும் நீயாக
இருந்தால்
என்இதயம் மட்டுமல்ல
என்
உயிரையும்நான்
கொடுப்பேன்

ஜெகதீஸ் நிஜிந்தா
ஓமந்தை

## பணம்

தொட்டில் தொடங்கி
பாடை வரைக்கும்
பகுடிவதை புரிகிறாய்.
பகலிலும் கண்ணடித்து
காரியத்தை கலக்குகிறாய்.
அரச அதிகாரியும்
அரசியல் அதிகாரியும்
அலசிப்பார்க்கின்றனர்
அம்மணி
நீதான் (கண்) மணி

-யாழ்விஜய்

புதைக்கப்பட்ட நினைவுகளை
தோண்டிப் பார்க்கின்றோம்
நாமும் எம் மக்களும்
இனிமையான தேசப்பாடல்கள் நேசிப்போம்

அன்பு காட்டும் எம்மையும்
அன்பு கரம் நீட்டும் எம்மையும்
வீழ்த்தி விடாதீர்கள்
துப்பாக்கி முனையினில்
வார்த்தைகளோ சிறிதானாலும்
வலிமை யாவது
துப்பாக்கி தோட்டாக்கள்
நீதி மறுத்த போதும் நின்மதி
தேடுவதில்லை எம்மை...
ஓலை குடிசையினில் ஏழையின் கனவுகள்
விடிவதற்கு நேரமின்றிப் போனாலும்
எம் தமிழலை புசித்து
நாம் உயிர் வாழ்வோம்
நித்திய ஜீவிகளாய்

**எம்.ஆனந்தகுமார்**
**இல:161/B, சிதம்பரபுரம்,**
**வவுனியா.**

கலையாலே புவியாளும் கலைவாணியே - உன்
நிலையாலே உயிராகும் கவிமாலையே
அலையாலே ஆர்த்தாலும் அழியாததே - கல்வி
குலையாதே குலமகளே நீ வாழ்கவே
(கலையாலே...)
போராடு புயல்வந்து சூழ்ந்தாலுமே - அன்றி
வேரோடு வயல் வெந்து வீழ்ந்தாலுமே
நாவோடு சுவையூறா நாளில்லையே - கல்வி
சாகாத வரம் கொண்ட ஒளிவெள்ளமே
(கலையாலே...)
சீரோடு வளர்க்கின்ற அன்னையவள் - உன்னை
சிரம் தாழ்த்தி கைகூப்பும் பிள்ளையிவன்
தமிழோடு வாழ்வதற்கு துணையாகுவாய் - கல்வி
கருத்தோடு வீணையிலே எனைத் தாங்குவாய்.

-பருத்திதாசன்



# සිංහල උගනිමු

## சிங்களம் கற்போம் 13

அன்பார்ந்த வாசகர்களே!
දයාබර පාඨකයිනි,

**මෙම කලාවයෙන් පූර්ව කියා වන මිශ්‍ර කියා හඳුනා ගනිමු**
இவ்விதழ் மூலம் இறந்தகால வினையெச்சம், நிகழ்கால வினையெச்சம் போன்றவற்றை கற்போம்.

### இறந்தகால வினையெச்சம்

### පූර්ව ක්‍රියා

**පූර්ව කියා කියන්නේ අවසාන කියාවට මුලින් කරලා ඉවර වූ කියා**
ஒரு வசனத்தில் இறுதியாக அமையும் வினைச் சொல்லிற்கு முன்பு அமையும் வினைச்சொற்கள் வினையெச்சம் என கூறுவோம்

**තාත්තා කෑම කාලා පත්තරය බැලුවා.**
அப்பா சாப்பிட்ட பின் செய்தித்தாள் வாசித்தார்.

**මෙහි කාලා කියන්නේ පූර්ව කියාව බැලුවා කියන එක වාක්‍යයේ අවසාන ක්‍රියාවනෙග ඒ අනුව කාලා යන්න පූර්ව ක්‍රියාව වෙනවා.**
இங்கு காலා என்பது இறந்தகால வினையெச்சம் ஆகும்.

**එක වාක්‍යය ක පූර්ව කියා එක ක් නොව කිහිපයන් ද තියෙන්න පුළුවන්**
ஒரு வசனத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட இறந்தகால வினையெச்சங்கள் அமையலாம்

**ළමා නැගිටලා දත් මැදලා මුහුණ සෝදලා කෑම කෑවා**
**මේ වාක්‍යයේ නැගිටලා මැදලා සෝදලා යන පද පූර්ව ක්‍රියා වෙනවා**
பிள்ளை எழும்பி, பல் துலக்கி, முகம் கழுவி உணவு உண்டார்.

**මේ වාක්‍යවල පූර්ව ක්‍රියා හඳුනාගන්න**
இவ்வசனங்களில் அமைந்துள்ள இறந்தகால வினையெச்சங்களை அறிந்துகொள்வோம்.

**අයියා වතුර උණුකරලාතේ හදලා සීයාට දුන්නා**
அண்ணா தண்ணீர் கொதிக்க வைத்து தேனீர் தயாரித்து தாத்தாவிற்கு கொடுத்தார்.

**පූසා පෙට්ටියට නැගලා ජනේලයට පැනලා දිව්වා**
பூனை பெட்டிக்கு மேல் ஏறி ஜன்னலில் பாய்ந்து ஓடியது.

**වඳුරෝ රතු තොප්පි අරගෙන ගහට නැගලා ඔළුවට දා ගත්තා**
குரங்குகள் சிவப்பு நிற தொப்பிகளை எடுத்துக் கொண்டு மரத்தில் ஏறி தலையில் போட்டுக் கொன்டன.

### මිශ්‍ර කියා

### நிகழ்கால வினையெச்சம்

**අවසාන කියාවත්තෙක්ක කරන ක්‍රියා මිශ්‍ර ක්‍රියා කියලා කියනවා**
இவ் வசனத்தில் இறுதி வினைச்சொல்லுடன் சேர்ந்து செயற்படும் வினை நிகழ்கால வினையெச்சம் ஆகும்.

**අම්මා පොල් ගාමින් මට කතා කරන්නවා**
அம்மா தேங்காய் திருவிக்கொண்டு என்னை அழைத்தாள்.

**විජයි තේ බොමින් රූපවාහිනිය බලනවා**
விஜய் தேனீர் குடித்துக்கொண்டு தொலைக்காட்சியை பார்க்கின்றார்.

**ලොකු අම්මා කතා කරමින් ගේ අතුගානවා**
பெரியம்மா கதைத்துக்கொண்டு வீட்டைக் கூட்டுகின்றார்.

**බල්ලා බුරමින් හොරාව එළවනවා**
நாய் குரைத்துக் கொண்டு கள்வனை துரத்தியது

**පත්මාවති සින්දු කියමින් නටනවා**
பத்மாவதி பாட்டுப் படித்துக்கொண்டு நடனம் ஆடினாள்.

මතු සම්බන්ධයි
தொடரும்

**பி.வி.செல்வராஜ்**
விரிவுரையாளர் (ஓய்வுபெற்ற) தேசிய கல்வியியற் கல்லூரி
පී.වී.සෙල්වරාජ්
කථිකාචාර්ය (විශ්‍රාමික)

# 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் மாணவர்களுக்கான வினாத்தொகுப்பு

மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம்-5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சையின் வினாத்தாள் 1 இற்கான மாதிரி வினாக்கள்

**ஆசிரியர்: என்.எஸ்.தீபன்** B.A, PG Dip in Edu, Dip in Teach
வ/பூந்தோட்டம் ம.வித்தியாலயம்




1 ஒரு தாமரைக் குளத்திலுள்ள தாமரைப்பூக்கள் முதல் நாள் இருந்ததை விட அடுத்தநாள் இருமடங்கு பூக்கும் அக்குளத்தில் 10ம் நாள் குளம் முழுவதும் பூக்களால் நிறைந்திருந்தது குளத்தின் 1/4 பங்கு பூக்கள் எத்தனையாம் நாள் பூத்திருக்கும்?

1. 4ம் நாள் 2. 6ம் நாள் 3. 8ம் நாள் 4. 9ம் நாள்


2. பின்வரும் தகவல்களின் அடிப்படையில் சரியான விடையை கண்டுபிடியுங்கள்
1kg சீனியின் விலை =500 g பருப்பின் விலை
250 g பருப்பின் விலை =500 g மிளகாயின் விலை
பின்வரும் அட்டவணைக்கேற்ப குறைவாக பணத்தை கொடுக்க வேண்டியவர் யார்?

| சாஜித் | சாரா | சாமா | சாரதா |
|---|---|---|---|
| 1 kg சீனி | 5000 g சீனி | 1 kg சீனி | 2 kg சீனி |
| 1 kg பருப்பு | 250 g பருப்பு | 500 g பருப்பு | 250 g பருப்பு |
| 1kg மிளகாய் | 1 kg மிளகாய் | 500 g மிளகாய் | 250 g மிளகாய் |

01)சாஜித் 02)சாரா 03)சாமா 04)சாரதா

3. 


இவ்வுருவின் சுற்றளவு யாது?
01)24cm
02)24m
03)16m

4. 

8 CM நீளமும் 8CM அகலமும் கொண்ட சதுரம் பல சிறிய சதுரங்களாக பிரிக்கப்பட்டுள்ளது இங்கு நிழற்றிய பகுதியின் பரப்பளவு யாது?
01) 24 $Cm^2$
02) 6 $Cm^2$
03) 384 $Cm^2$


5. அப்பிள் வியாபாரி ஒருவர் மூன்று குவியல்களில் பழங்கள் வைத்திருந்தார் முதலாவது குவியலை இரண்டு மடங்கு இரண்டாம் குவியலிலும் இரண்டாம் குவியலை விட இரண்டு மடங்கு மூன்றாம் குவியலிலும் பழங்களை வைத்திருந்தார் முதலாம் குவியலில் இருந்த பழங்கள் 12 எனின் மூன்றாம் குவியலில் இருந்து பழங்கள் யாவை?

01)24 பழங்கள் 02)12 பழங்கள் 03)48 பழங்கள் 04)36 பழங்கள்

# ஆண் குரலுக்கும் பெண் குரலுக்கும் வித்தியாசம் இருப்பது ஏன்? நாம் எவ்வாறு பேசுகிறோம்?

வளர்ந்த பெண்ணில் 12.5mm 17.5mm வரை நீளமும் இருக்கும். இவை சப்தத்தை உண்டாக்க வளர்ந்த ஆண்களில் வினாடிக்கு 120 130முறையும் வளர்ந்த பெண்ணில் 200 முதல் 220 முறையும் குழந்தைகளில் 300 முதல் 310முறையும் அதிர்கிறது.

நாம் ஒவ்வொருவரும் பிறக்கும் போது நம்முடைய குரல்நாண் மிகச் சிறியதாகவும் விறைப்பாகவும் இருக்கும். நாம் வளரவளர நம்முடைய குரல்நாணும் வளர்ச்சியடையும். மூன்று அல்லது நான்கு வயது வரை ஆண் பெண் ஆகிய இருபாலருக்கும் குரல்நாணின் வளர்ச்சி ஒரே அளவில் தான் இருக்கும் ஆகையால் நான்கு வயதுவரையுள்ள குழந்தைகளின் குரலில் ஆண் மற்றும் பெண் என்ற வித்தியாசத்தை காண முடியாது. நான்கு ஆண்டுகளுக்கு பிறகு ஆண்களின் குரல்நாண்கள் பெண்களின் குரல் நாண்களை காட்டிலும் வேகமாக வளர ஆரம்பித்துவிடுகிறது. ஆண்களில் குரல்நாண் வளர வளர அதன் விறைப்புத்தன்மை குறைந்து விடுகிறது இதனால் குரலி
ல்





மென்மை குறைந்து ஒருவித கரகரப்பு தொற்றிக் கொள்கிறது. ஆண்களோடு ஒப்பிடுகையில் பெண்களின் குரல் நாண்கள் அளவிலும் சரி வளர்ச்சியிலும் சரி குறைவாக இருப்பதால் பெண்ணில் குரல்நாண்கள் விறைப்படைந்து குரலில் மென்மை கூடுகிறது. இதனால் தான் ஆண்களின் குரலிலிருந்து பெண்களின் குரல் முற்றிலும் வித்தியாசப்படுகிறது ஆணாக இருந்தாலும் சரி பெண்ணாக இருந்தாலும் சரி ஒருவர் பனிரெண்டு வயதை எட்டும் போது அவருடைய குரல்நாண் அதன் முழுவளர்ச்சியை எட்டிவிடும். இதன் காரணமாகத்தான் பனிரெண்டு வயதிற்குப்பிறகு ஆண், பெண் குரல்கள் முற்றிலும் வேறுபடத் துவங்குகிறது. பெண்களுக்கு மென்மையான குரல் அவர்களுடைய 50–வயது வரை நீடிக்கும் அதன் பிறகு அவர்களுக்கும் குரல்நாண் நெகிழ்ச்சியடைய துவங்குவதால் ஐம்பது வயதிற்கு பிறகு பெண்களில் சிலருக்கு ஆண்களை போலவே குரல் தடிமனாக மாறிவிடுகிறது, அறுபதுவயதிற்கு பிறகு ஆண் பெண் இருபாலரின் குரல்நாண்களும் ஒன்றுடன் ஒன்று உரசிக்கொள்ள ஆரம்பித்துவிடுவதால் அவர்கள் ஆணாக இருந்தாலும் சரி பெண்ணாக இருந்தாலும் சரி குரலில் தளர்ச்சியும் நடுக்கமும் உண்டாகிறது. இதன் காரணமாகத்தான் அறுபது வயதிற்கு மேற்பட்ட சிலருக்கு வார்த்தைகளை தெளிவாக உச்சரிக்க முடியாமல் போகிறது.

நாம் நமது தொண்டையிலுள்ள குரல்நாண்களை தளர்வடையாமல் பார்த்துக்கொண்டோமானால் நம்முடைய குரல் எந்த வயதிலும் மாறாமல் இனிமையாக இருக்கும்படி பார்த்துக்கொள்ளலாம். இதற்க்காக நாம் சிலவற்றை பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். முக்கியமாக மது அருந்துதல் கூடாது, மது அருந்தும் போது தொண்டையிலுள்ள அனைத்து தசைகளும் பாதிப்படைவதால், மதுவை முற்றிலும் தவிர்ப்பது நல்லது. மேலும் புகை பிடித்தலையும் மாசு நிறைந்த காற்றுகளை சுவாசிப்பதையும் கூடுமானவரை தவிர்க்க வேண்டும், முக்கியமாக தண்ணீர் நிறைய குடிக்க வேண்டும் தொண்டையை வற்றச் செய்யாமல் எப்போதும் ஈரமாக வைத்திருந்தால் எந்த வயதிலும் நம்முடைய குரலில் இளமையை கட்டிவைத்திருக்க முடியும்.

குரல்நாண்கள் சப்தத்தை உண்டாக்குவதோடு மட்டுமல்லாமல் அவற்றை பண்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது, ஆகையால் தான் நம்மால் வார்த்தைகளை தெளிவாக உச்சரிக்க முடிகிறது. மனிதனை தவிர ஏனைய விலங்குகளில் இந்த குரல்நாண்கள் (Vocal Cords) அமைப்பு இல்லாததால்

தொடரும்...

# வர்ணம் தீட்டி பரிசுகளை வெல்லுங்கள்



**குறிப்பு: 5ம் ஆண்டுக்கு உட்பட்ட மாணவர்களின் ஆக்கங்கள் மட்டுமே போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படும்**

உங்கள் ஆக்கங்களை 25.08.2014 க்கு முன் கிடைக்குமாறு எமது வழமையான முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

தெரிவு செய்யப்படும் 3 வர்ணத்திற்கு பாடசாலை உபகரணப் பொருட்கள் பரிசாக வழங்கப்படும்

பெயர் : ............................................

முகவரி : ............................................

தரம் : ............................................

தொ.பே.இல : ............................................

பாடசாலை : ............................................

வ.ஆசிரியர் ஒப்பம் : ............................................

# இம்மாத இராசிபலன்

**மேஷம்:** குருபகவான் ஜென்ம ராசிக்கு 4இல் சஞ்சரிப்பதனால் அனுகூலமற்ற அமைப்பு தேவையற்ற அலைச்சல்கள் உடல் நிலை சோர்வு குடும்பத்தில் அடிக்கடி வாக்குவாதம் உண்டாகும் நிம்மதி குறையும், சுபகாரியங்கள் நடைபெறும் பணவரவுகள் ஏற்ற இறக்கமாக இருக்கும் வியாபாரத்தில் வரவேண்டிய வாய்ப்புக்கள் கிடைக்கும் வேலையாட்களால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்பட்டு லாபம் குறையும். குருசாதம் இன்றி சஞ்சரிப்பதால் தெட்சனாமூர்த்தி

**ரிஷபம்:** குருபகவான் ஜென்மராசிக்கு 3இல் சஞ்சாரம் செய்வதினால் எதையும் சமாளிக்கு தன்மை உடையவர்கள் பணவரவுகள் தேவைக்கேற்ப இருக்கும் கணவன் மனைவிக்கிடையே ஒற்றுமை குறையும் விட்டுக்கொடுத்து நடப்பது நல்லது. பெரிய மனிதர்களின் ஆதரவு கிடைக்கும். பேசும்போது பேச்சில் நிதானம் வேண்டும். கல்வி மந்த நிலை ஏற்படும் குருபகவானுக்கு நெய்தீபம் ஏற்றி வழிபாடு செய்யவும் ஊனமுற்ற ஏழைகளுக்கு உதவி செய்யவும்

**மிதுனம்:** குருபகவான் ஜென்மராசிக்கு 2இல் சஞ்சாரம் செய்வதால் குடும்பத்தில் இருந்துவந்த பிரச்சினைகள் விலகும் மருத்துவ ஒய்வுகள் குறையும் பணவரவுகள் தாராளமாக இருக்கும் அனைத்து வழிகளிலும் வெற்றி கிட்டும் வெளியூர் தொடர்புடைய வாய்ப்புக்கள் கிட்டும் திறமைக்கேற்ப பாராட்டுகள் கிடைக்கும் சனிபகவானுக்கு பரிகாரம்

**கடகம்:** குருபகவான் ஜென்ம ராசியில் சஞ்சாரம் செய்வதினால் சாதகமான அமைப்பைபெறமுடியாது உடல் ஆரோக்கியம் பாதிக்கும் கணவன் மனைவிக்கிடையே பிரச்சினைகள் வரலாம். ஆடம்பரசெலவுகள் அதிகரிக்கும் பணிகளில் கவனம் செலுத்துவது நல்லது. செலவுகள் அதிகரிக்கும் எதையும் சமாளித்து நடப்பது நல்லது. உடன் பணிபுரிபவர்களை அனுசரித்து செல்வது நல்லது வியாழன் தோறும் குருபகவானுக்கு கொண்டல் கடலை மாலை அணிவித்து வழிபாடு செய்வது நல்லது

**சிம்மம்:** குருபகவன் உங்கள் ஜென்மராசிக்கு 12ல் சஞ்சாரம் செய்வதினால் அவ்வளவு சாதகமான அமைப்பு இல்லை. பணவரவுகளில் நெருக்கடிகள் ஏற்படாமலும் திடீர் பணவரவுகள் இருக்கும் குடும்பத்தில் சுப விரயங்கள் ஏற்படும் கணவன் மனைவியிடையே கருத்து வேறுபாடுகள் இருக்கும் வியாபாரத்தில் சுமாரான நிலை ஏற்படும் நிதானத்தை கடைப்பிடித்து கோபத்தை குறைப்பது நல்லது தெட்சணாமூர்த்திவழிபாடு செய்வது நல்லது.

**கன்னி:** குருபகவான் உங்கள் ஜென்மராசிக்கு 11இல் உச்சம் பெற்று சஞ்சாரம் செய்கின்றார் அற்புதமான அமைப்பாகும். பணவரவுக்கு பஞ்சம் இருக்காது சொந்தமாக வீடு வாகனம் போன்றவை யோகமும் சிலருக்கு உண்டு.வெளிநாட்டுவாய்ப்பு உண்டு. குடும்பத்தில் சுபிட்சம் நிறைந்து இருக்கும் தொழில் போட்டிகள் குறையும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு உண்டு படிப்பில் முன்னேற்றம் உண்டு. விநாயகரை வழிபாடு செய்யவும்

**துலாம்:** குருபகவான் உங்கள் ஜென்மராசிக்கு 10இல் சஞ்சாரம் செய்வதனால் அவ்வளவு சாதகமான அமைப்பு என்று கூறமுடியாது பணவரவுகள் தேவைக்கேற்ப இருக்கும் ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும் கணவன் மனைவிக்கிடையே கருத்து வேறுபாடுகள் உண்டாகும் தேவையற்ற பிரச்சினைகளில் தலையிடாது இருப்பது நல்லது. வியாழன் தோறும் நெய்

**விருச்சிகம்:** குருபகவான் உங்கள் ஜென்ம ராசிக்கு, 9இல் சஞ்சாரம் செய்வதினால் அற்புதமான அமைப்பு ஆகும். சுபகாரியங்கள் கைகூடும் குடும்பத்தில் மகிழ்ச்சியும் ஆரோக்கியமும் இருக்கும். இருக்கும் உடல் ஆரோக்கியம் இருக்காது. புத்திர வழியில் கவலை தரும் பணவரவுகள் சரளமாகும் சொந்தமாக கார் பங்களா வாங்குவீர்கள் கடன் யாவும் தடையின்றி தீரும் சனிபகவானுக்கு பரிகாரம் செய்யவும் ஆஞ்சனேயரை வழிபாடு

**தனுசு:** குருபகவான் உங்கள் ஜென்மராசிக்கு அஷ்டம ஸ்தானமான 8இல் சஞ்சாரம் செய்கின்றார். உடல் ஆரோக்கியம் அடிக்கடி பாதிக்கும் கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் தேவை. ஒவ்வொரு விசயத்திலும் சிந்தித்து செயற்படுவது நல்லது. குடும்பத்தில் மகிழ்சிகரமாக இருக்கும் வீண் பிரச்சினைகள் வந்து சேரும் உதவிகள் தடையின்றி கிடைக்கும். எதிர்பாராத இடமாற்றம் ஏற்படும் குருவழிபாடு செய்யவும்.

**மகரம்:** குருபகவான் உங்கள் ஜென்ம ராசிக்கு 7இல் சஞ்சாரம் செய்ய இருக்கின்றார். பணவரவுகளில் பஞ்சம் இருக்காது. கடன்கள் யாவும் குறையும் தடைபட்ட சுபகாரியம் கைகூடும் எதிர்பாராத வெற்றி கிட்டும் எதிர்பாராத இடமாற்றங்கள் உண்டு. பணவரவுகள் சிறப்பாக அமையும் நல்ல வரங்கள் தேடிவரும். வழக்குகளில் தீர்ப்பு சாதகமாக அமையும்

**கும்பம்:** குருபகவான் உங்கள் ஜென்மராசிக்கு 6இல் சஞ்சாரம் செய்வதினால் பொருளாதாரநிலையில் சிறப்பாக இருக்கும். தேவையற்ற பிரச்சினைகள் வரும். பிறர் விசயத்தில் தலையிடாது இருப்பது நல்லது. பணவரவுகளில் நெருக்கடி உண்டாகலாம். வீண்வம்பு வழக்குகள் உண்டாகும் பயணங்களால் அலச்சல்கள் உண்டாகும் தெட்சணாமூர்த்தி

**மீனம்:** குருபகவான் உங்கள் ஜென்மராசிக்கு 5இல் சஞ்சாரம் செய்வதால் இது அற்புதமான அமைப்பு பணவரவுகள் தாராளமாக இருக்கும். வீடு, கார் போன்றவை வாங்குவீர்கள் பொன்பொருள் வந்து சேரும் கணவன் மனைவியிடையே விட்டுகொடுத்து செல்வது நல்லது. பேச்சில் நிதானம் தேவை உத்தியோக உயர்வுகிட்டும் ராகு கேது பகவானுக்கு வழிபாடு செய்யவும்.

"வேதாகம கிரியா ஜோதி" **சிவஸ்ரீ இரவீந்திர உமா சுதக்குருக்கள்**
ஸ்ரீ லக்ஷ்மி சமேத நரசிங்கர் தேவஸ்தானம், பூந்தோட்டம், வவுனியா. 077 2265778


வவுனியா பஜார் வீதி இல: 166இல்
உதயமாகியுள்ளது
Milano
Bake House & Cool Spot
Bekary Food Items
Icing Cake
Butter cake
Bomby Sweets
Ice cream
Juice
No:166, Bazaar Street, Vavuniya. 077 7282490





Printed by Vijay Printing Centre, and Published by Print Land Publication, No:172B, Mill Road, Vavuniya. in August, 2014